கர்ப்பிணியாகும் பொழுது, அவளுக்கு வீட்டு வேலைகள் கொஞ்சங் கொஞ்சமாக நின்று விடுகின்றன.

உன்னிடத்துப் பாக்கியிருக்கும் சிற்சில குடும்பக் கடமைகளைச் செய்து முடித்துவிடு. பிறகு உனக்குச் சாந்தி உண்டாகும்.

ஒரே மனிதன் ஆலயம் ஒன்றில் பூஜை செய்யும்பொழுது அர்ச்சகன் என அழைக்கப்படுகிறான். ஆனால் மடைப்பள்ளியில் பாகம் செய்யும் பொழுது சமையல்காரன் எனப்படுகிறான். பரம்பொருள் ஞானிகளால் பிரம்மம் என்றும், யோகிகளால் ஆத்மன் என்றும், பக்தர்களால் பகவான் என்றும் அழைக்கப்படுகிறார்.

பொருள் சம்பாதிப்பது போன்ற உலகக் கிருத்தியங்களில் மனிதன் ஈடுபட்டே ஆகவேண்டும். ஆனால் தன் தேவைக்குமேல் பொருள் சம்பாதிப்பதில் ஆத்மசாதகன் தன் மனத்தைச் செலுத்தலாகாது. இப்படி ஏற்பட்டுள்ள கடமைகளைத் தான் பற்றற்றவனாக இருந்து செய்ய வல்லவனாக வேண்டும் என்று இறைவனிடத்துக் கசிந்துருகிப் பிரார்த்தனை பண்ணவேண்டும்.

''இறைவா, என்னுடைய உலகக் கடமைகளைப் படிப்படியாகக் குறைத்துவிடு. இல்லையேல் நான் உன்னை மறந்துவிட்டு உலகக் கிருத்தியங்களிலேயே ஈடுபடுபவன் ஆகிவிடுவேன்'' — இங்ஙனம் ஒருவன் பிரார்த்திக்க வேண்டும்.

அலுவல்கள் பலவற்றை மக்கள் எடுத்துக்கொள்கின்றனர். அவைகளையெல்லாம் தாம் பற்றில்லாது செய்வதாகவும் அவர்கள் சொல்லிக்கொள்கின்றனர். ஆனால் உண்மையில் உள்ளத்தில் சுயநலம் நிறைந்திருக்கிறது.


காளி மார்க்
அனைவருக்கும்
ஆனந்தம் அளிப்பது
காளி
மார்க்
ஸ்டுடியோ 'செட்'டில்
அனைவரையும்
ஆட்டிவைக்கும்
டைரக்டரையும்
ஆட்கொள்வது
காளிமார்க் பானம்.
ஆயிரக்கணக்கானவர்கள்
காளிமார்க்கின் குளிர்ந்த,
புதுமை மாருத, ருசியை
அனுபவிக்கின்றனர்.
நீங்களும் உங்கள் தாகம்
தணிய காளிமார்க்
பானங்கள் அருந்துங்கள்.
Kali mark
50 ஆண்டுகளாகப் புகழ் பெற்றவை. எங்கும் கிடைக்கும்.

நமது கலாச்சாரம்

கலைச்செல்வி இராம. மணிமேகலை

2. பண்டையக் குடும்பமும் இன்றையக் குடும்பமும்

ஒவ்வொரு மனிதனிடத்திலும் ஒரு தனிப்பட்ட பண்பு உண்டு, அந்தப் பண்புதான் அவனுடைய சிந்தனைகளுக்கும் செயல்களுக்கும் அடிப்படையாக விளங்குகிறது என்பதையும்;

தனி மனிதனைப் போலவே, உலகில் உள்ள ஒவ்வொரு தனி நாடும் தனக்கென்று ஒரு பண்பாடு உடையதாகவிளங்குகிறது, அந்தப் பண்பாடே கலாச்சாரம் எனப்படுவது என்பதையும்;

நாம் சென்ற கட்டுரையில் கண்டோம்.

அப்படியானால், நமது பாரத நாட்டின் கலாச்சாரம் யாது?

இந்தக் கலாச்சாரத்தை இன்றைய பாரதமக்களின் வாழ்க்கை முறைகளைக் கொண்டு நிர்ணயிப்பதா? அல்லது பண்டைய பாரத மக்களின் வாழ்க்கை முறைகளைக் கொண்டு நிர்ணயிப்பதா?

பண்டைய மக்களின் வாழ்க்கையில், குடும்பம் என்பது ஒரு கோயில் போன்று விளங்கியது. தாயும் தந்தையுமே அந்தக் கோயிலில் வணங்கப்பட்டு வந்த தெய்வங்களாகக் காட்சியளித்தார்கள். ''அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்'' என்றார் ஔவை மூதாட்டியார். தாய் தந்தையர் மட்டும் அல்ல; மனைவிகூட அங்கு கிருகலக்ஷ்மியாகத்தான் மதிக்கப்பட்டாள். அந்த மனைவியும், தனக்குத் தன் கணவனைத் தவிர வேறு கடவுள் இல்லை யென்று கருதினாள். குழந்தைகள் பால முருகனைக அல்லது பால கோபாலனைப் போற்றப்பட்டனர். பெரியவர்கள் முதல் சிறுவர் சிறுமியர்வரை எல்லோரையுமே இப்படித் தெய்வங்களாகக் கருதும் மரபு, பண்டைய பாரதத்தில் கடைப் பிடிக்கப்பட்டு வந்தது.

தெய்வங்கள் வாழும் இடத்திற்குப் பெயர் என்ன? கோயில். அந்த முறையில், நம் பாரத நாட்டுக் குடும்பங்கள் அனைத்தும் முற்காலத்தில் கோயில்களாகவே விளங்கி வந்தன. கோயில்களுக்கு உரிய புனிதத்தன்மை, குடும்பங்களிலும் காப்பாற்றப் பட்டு வந்தது.

ஆனால் இக்காலத்தில், குடும்பம் என்பது கிட்டத்தட்ட ஒரு ஹாஸ்டலைப் போல் உருமாறிக் கொண்டு வருகிறது. அந்த ஹாஸ்டலில் சமையல் நடக்கும். எல்லோரும் உணவு கொள்வார்கள். உண்டபின், சில ஆண்களும் பெண்களும் கல்லூரிகளுக்குச் செல்வார்கள். மற்றும் சில ஆண்களும் பெண்களும் காரியாலயங்களுக்குச் செல்வார்கள். மீண்டும் இரவில் வந்து எல்லோரும் ஒன்று கூடுவார்கள். உண்பார்கள். உறங்குவார்கள். மறுநாட் காலையில், தத் தம் காரியங்களை நோக்கிச் சென்று விடுவார்கள்.

இவர்களிலே, எங்கேயும் செல்ல முடியாமல் வீட்டிலேயே

தேங்கிக் கிடக்கும் இரண்டொரு முதியவர்களும் இருப்பது உண்டு. இந்த முதியவர்களின் பிள்ளை களும், பெண்களும், பேரன் களும், பேத்திகளும்தாம் அக் குடும்பத்தைச் சேர்ந்த மற்றவர் கள். இருந்தாலும், அந்த இளை யோர்களின் நோக்கில் இந்த முதியோர்கள் ஏதோ கால் ஒடிந்துபோன நாற்காலிகளைப் போலவே காட்சியளிக்கின்றனர்.

காரணம், இன்றையக் குடும் பங்களில் ஒவ்வொருவரும் தமக் கென்று வாழ்பவராகவே இருக்கி ருர்கள்.

''நான் பாடுபடுவதும் பணம் சம்பாதிப்பதும் எனக்காக! என் வாழ்க்கை வசதிகளைப் பெருக்கிக் கொள்வதற்காக! என் மனைவி மக்கள் நலமாக வாழ்வதற் காக!'' என்று குடும்பத் தலை வன் எண்ணுகிருன்.

''எனக்கும், என் கணவனுக் கும், என் குழந்தைகளுக்கும் யாதொரு குறையும் இருக்கக் கூடாது'' என்றே குடும்பத் தலைவி எண்ணுகிருள்.

ஆனுல், அந்தத் தலைவனே தலைவியோ, தம் குடும்பத்தில் உள்ள முதியவர்களைப் பற்றிக் கவலைப்படுவதே கிடையாது. அவர்களுடைய சௌகரியங்களைக் கவனிப்பதே கிடையாது. ''வய தான காலத்தில் அவர்களது மனம் நோகும்படி நாம் எதுவும் பேசிவிடக் கூடாதே'' என்று எண்ணுவதில்லை. இன்னும் சொல்லப் போனுல், ''இந்தக் கிழடுகள் காலா காலத்தில் கண்ணை மூடினுல் என்ன?'' என்றே அவர்கள் எண்ணுகிருர் கள். சில சமயங்களில் அந்த முதியவர்களிடத்தில் மரியாதைக் குறைவாகவும் நடந்து கொள் கிருர்கள்.

இவர்கள் இப்படி நடப்பதை, இவர்களுடைய பிள்ளைகளும் பெண்களும் பேரன்களும் பேத்தி களும் பார்த்துக் கொண்டே வருகிருர்கள்.

சில ஆண்டுகள் சென்ற பின், பழைய முதியவர்கள் இறந்து விடுகிருர்கள். அவர்களுடைய மகனும் மருமகளும் இப்போது புதிய முதியவர்களாக மாறி விடு கிருர்கள். அந்தப் புதிய முதிய வர்களின் மகனும் மருமகளும் இப்போது புதிய குடும்பத் தலை வனும் புதிய குடும்பத் தலைவியு மாய் உயர்ந்து விடுகிருர்கள்.

உடனே பழைய முதியவர் களைப் பழைய குடும்பத் தலைவ னும் பழைய குடும்பத் தலைவியும் எப்படி மரியாதைக் குறைவாக நடத்தினர்களோ, அதே பாணி யில் இந்தப் புதிய குடும்பத் தலை வனும் புதிய குடும்பத் தலைவியும் புதிய முதியவர்களை மரியாதைக் குறைவாக நடத்துகிருர்கள்.

பெரும்பாலான குடும்பங்களில் இதுவே இன்றைய நடை முறை வழக்காக இருந்து வருகிறது. அன்னையையும் பிதாவையும் முன் னறி தெய்வங்களாகக் கருதுகிற மரபே மறைந்து கொண்டு வரு கிறது. மாமனுருக்கும் மாமியா ருக்கும் மதிப்பு அளிக்க மறுக் கின்ற குடும்பத் தலைவி, அவர் களின் புதல்வனை தன் கணவனை யும் அடக்கியாள ஆசைப்படு கிருள். வாய்ப்பு நேரும்போ தெல்லாம், அவனுடைய பைத்தி யக்காரத்தனங்களை சுட்டிக் காட்டி அவனை மட்டம் தட்டு கிருள். அதனுல் கிருக லக்ஷ்மி

என்னும் பெருமைக்கான உரிமையையும் இழந்து விடுகிருள்.

இப்படிப்பட்ட கணவன் மனைவியரால் வளர்க்கப்படுகிற குழந்தைகளின் நிலை எப்படியிருக்கும்? முதலில் பிறக்கும் இரண்டொரு குழந்தைகள் அளவுக்கு மிஞ்சிச் 'செல்லம்' கொடுத்து வளர்க்கப் படுகின்றன. பின்னல் பிறக்கும் குழந்தைகள் எல்லாம் தொல்லைகளாகக் கருதப்படுகின்றன.

பிள்ளைகள் வேண்டும் என்று தவம் கிடந்த காலம் போய், 'இனிமேல் பிள்ளைகளே வேண்டாம்!' என்று பெற்ருேர்கள் தவம் கிடக்கும் காலம் வந்திருக்கிறது. மக்களைப் பெருதவன் துர்ப்பாக்கியசாலி என்று கருதப் பட்ட காலம் போய், மக்களைப் பெற்றவன் துர்பாக்கியசாலி என்று கருதக்கூடிய காலம் வந்து கொண்டு இருக்கிறது,

எனவே, இன்றையக் குடும்ப வாழ்க்கையில்,

குழந்தைகள் பால முருகனே பால கோபாலனே அல்ல; பிறக்காமலே கருத்தடை செய்து கொள்ளப்பட வேண்டிய தொல்லையான சுமைகள்.

மனைவி கிருக லக்ஷ்மி அல்ல; கணவனுடைய கண்ணில் விரலை விட்டு ஆட்டுகிற கொடுங்கோல் அரசி.

கணவன் அவளுடைய கண் கண்ட தெய்வம் அல்ல; அவளால் கூண்டில் நிறுத்தி விசாரிக்கப்படுகிற ஒரு நிரந்தரக் குற்றவாளி.

அவனுக்கு இத்தகைய ஒரு கதி நேருவதற்குக் காரணம் என்ன?

அவன் தன் பெற்ருேர்களை மதிக்காமல் நடந்து, கொண்டான்.

அதனுல், அவனுடைய மனைவி அவனை மதிக்காமல் நடந்து கொள்கிருள்.

நாளைக்கு அவனையும் அவனுடைய மனைவியையும் அவ்விருவருக்கும் பிறக்கின்ற குழந்தைகள் மதிக்காமல் நடந்து கொள்ளப் போகின்றன.

இதுதான் நமது இந்தியக் குடும்பங்களின் இன்றைய நிலை.

குடும்பத் தலைவன் மட்டும் தன்னுடைய தாய் தந்தையரைத் தெய்வமாகப் போற்றி யிருப்பானுயின்;

அவனுடைய மனைவியும் அவனைத் தன் தெய்வமாகப் போற்றியிருப்பாள். தானும் ஒரு கிருக லக்ஷ்மியாக விளங்கி யிருப்பாள். அவர்களுடைய குழந்தைகளும் குழந்தைத தெய்வங்களாகப் போற்றப் பட்டு இருக்கும். அப்போது அந்தக் குடும்பமே ஒரு கோயிலாகக் காட்சியளித்திருக்கும்.

இப்போது ஏன் அது ஒரு ஹாஸ்டலாகக் காட்சியளிக்கிறது?

பெரியவர்களைப் போற்றுகிற நமது பழமையான மரபு மறக்கப்பட்டு, பணம் சம்பாதிக்கிறவர்களை மட்டுமே போற்றுகிற ஒரு புதுமையான மரபு உருவாகி

வருவதே அதற்குக் காரணம் ஆகும்.

வயதான பெரியவர்களால் பணம் சம்பாதிக்க முடியாது. ஆகையால், இப்போது சம்பாதித்துக் கொண்டு இருக்கும் குடும்பத்தலைவன், அவர்களைப் பயன் அற்ற 'கிழடுகள்' என்று அலட்சியம் செய்கிறான்.

பணம் சம்பாதித்துக் கொண்டிருக்கும் குடும்பத் தலைவனை 'இன்னும் கூடுதலாக ஏன் சம்பாதிக்கக் கூடாது?' என்று அவன் மனைவி குற்றம் சாட்டுகிறாள்.

கணவனும் மனைவியும்சேர்ந்து, ''நமக்கு எவ்வளவு வருமானம் வந்தாலும் இந்தக் குழந்தைகளை வளர்ப்பதற்கும் படிக்க வைப்பதற்கும் போதாதுபோல் இருக்கிறதே?'' என்று எரிச்சல் அடைகிறார்கள்.

இப்படி ஒருவரைப் பார்த்து மற்றவர் எரிச்சல் அடையும் காட்சிகளையே நம் குடும்பங்களில் நாம் பெரும் பாலும் காண முடிகிறது.

இதுதான் நம் பாரத நாட்டின் உண்மையான கலாச்சாரமா?

—தொடரும்

சைவமும்
அத்வைதமும்
ஒன்றே!



ஸ்ரீ காமகோடி
சங்கராச்சார்ய ஸ்வாமிகள்

திருப்பெருந்துறையில்சிவபெருமானிடமிருந்து உபதேசம் பெற்றதும், மாணிக்கவாசகர்,

"இன்றெனக் கருளி
யிருள் கடிந்துள்ளத்(து)
எழுகின்ற ஞாயிறே போன்று,

நின்ற நின்றன்மை
நினைப்பற நினைந்தேன்
நீயலாற் பிறிது மற்றின்மை

சென்று சென்றணுவாய்த்
தேய்ந்து தேய்ந்தொன்றாந்
திருப்பெருந்துறையுறை சிவனே

ஒன்று நீ யல்லை
யன்றியொன்றில்லை
யாருனை யறியகிற் பாரே."

என்று கூறுகிறார்.

இங்கு, "நீயலாற் பிறிது மற்றின்மை" "ஒன்று நீயல்லை யன்றியொன்றில்லை" என்பன சிறந்த அத்வைதக் கொள்கையை விளக்குகின்றன.

கொற்றவன்குடி என்னும் ஊரினராகிய உமாபதிசிவாசாரியார், 'சங்கற்ப நிராகரணம்' என்று ஒரு நூல் எழுதியிருக்கிறார். அவர், அந்நூலின் கடைசியிலே, "இன்றெனக் கருளி" என்னும் திருவாசகத்தைக்கூறி, மாணிக்கவாசகரும் அத்வைதியாகி விடுகிறார் என்று நூலை முடித்திருக்கிறார்.

சைவ சாத்திரத்திற்கு முதனூலாகிய சிவஞான போதமே அத்வைதத்தைக் கூறுகிற நூல்தான்.

"ஓர் அரச குமாரன் பிறவியிலிருந்து வேடர் கூட்டத்தில் வளர்ந்தான். அதனால், தன்னை வேடனாகவே நினைத்தான். அவன்

உண்மையில் அரசகுமாரனுயிருந்தும், தன்னை வேடனுகவே நினைத்தது அஜ்ஞான மயக்கத்தாலே தான். பின்பு அரசன் அவனைத் தேடிக் கண்டு அவனுக்கு அறிவுறுத்த,' அஜ்ஞானத்தாலே தோன்றிய வேடத்தன்மை நீங்கித் தனது உண்மையான அரசகுமாரத் தன்மையை அடைந்தான்'' என்ற கதையை உதாரணமாகக் காட்டி, 'சீவனும் பரம் பொருளும் ஒன்றல்ல என்ற வேற்றுமைத் தோற்றம் மயக்கமே; சீவன் முக்காலத்தும் சிவனே' என்பது,

''ஐம்புல வேடரின்
அயர்ந்தனை வளர்ந்தென''

என்னும் சிவஞான போதம் 8-ம் சூத்திரத்தால் விளக்கப்படுகிறது.

இவ் விஷயத்தில் இதே உதாரணம் முற்காலத்திலேயே மறைமுடியாம் பிருஹதாரண்ய உபநிஷத்தின் பாஷ்யத்தில், முதல் அத்தியாயத்தில் 20 கண்டிகையில், ஸ்ரீ ஆதி சங்கர பகவத்பாதாசாரிய ஸ்வாமிகளால் விளக்கப் பெற்றிருக்கிறது,

இதனுல், சீவனுனவன் முத்தி நிலையில் மாத்திரமேயன்றி, ''முக்காலத்தும் எப்பொருளும் சிவமே'' என்ற நியாயத்தால், ஸம்ஸார நிலையிலும் தானறியாமற் போனுலும் அவ் வரசகுமாரனைப்போல உண்மையில் பரம்பொருளே; பரம் பொருளைத் தவிர வேறல்லன்' என்ற அத்வைத வேதாந்த உண்மை தெளிவாகிறது.

''யாவையும் சூனியம்
சத்தெதிராதலின்''

என்னும் சிவஞான போதம் ஏழாவது சூத்திரத்தில்,

'ஸத்தாகும் சிவத்தின்ஞானம் உதயமான பொழுது, அச்சிவத்தைத் தவிர வேறுள்ள எல்லாப் பொருள்களும் சூனியமாய் விடுகின்றன' என்ற தத்துவம் விளக்கப்படுவதால்,

'பரமாத்மாவின் ஸாக்ஷாத்காரம் ஏற்படுங்கால், உலகம் இல்பொருளாகின்றது' என்னும் அத்வைத வேதாந்த தத்துவம் வலியுறுத்தப்படுகிறது.

சிறந்த அனுபவாத்வைதியாகிய தாயுமான ஸ்வாமிகள், சிவஞான போதம் இயற்றிய மெய்கண்டாரை,

''பொய் கண்டார் காணுப்
புனிதமெனும் அத்துவித

மெய்கண்ட நாதனருள்
மேவுநா ளெந்நாளோ?''

என்று 'எந்நாட் கண்ணி'யிலே புகழ்கிருர்.

தாயுமானவர் சிறந்த அத்வைதி என்பதற்கு ஆதாரம் என்ன ?

அவருடைய பாடல்கள் யாவும் சுத்த அத்வைத தத்துவத்தையே விளக்குகின்றன.

உதாரணமாகச் சிலவற்றைக் கூறலாம்.

''சுத்த நிர்க்குணமான பரதெய்வமே'' என்று'சுகவாரி'யில் இறைவனை நிர்க்குணனுகக் கூறுகிருர்.

''இந்திர ஜாலங் கனவு கானலின் நீரென வுலகம்'' எனப் 'பரம்பொருள் வணக்கத்'தில் உலகத்தைப் பொய்யென்று அறிவிக்கிருர்.

''அத்துவித வஸ்துவை'', ''அத்துவித ஆனந்த சித்த முண்டாம்'' ''அத்துவித அனுபவத்தை'' என்று பல விடங்களில் அத்வைதச் சொற்களைப் பிரயோகிக்கிறார்.

இவற்ருல், தாயுமானவர் சிறந்த அநுபவ அத்வைதி என்பது தெளிவு.

அநுபவ அத்வைதியாகிய தாயுமானவரால் புகழப் பெறுகின்ற மஹாநுபாவரும், அத்வைதியாக இருக்கவேண்டுமாதலால், மெய்கண்டார் கூறும் மதம் அத்வைத மதமேயாகும்.

தாயுமானவர் முற் கூறிய பாட்டிலேயே ''அத்துவித மெய்கண்ட'' என்ற தொடரால், ''அத்துவிதமே மெய்; அதற்கு மாருன துவிதம் பொய்'' என்னும் கருத்தையும் வெளியிடுகிருர்.

சைவமும் அத்வைதமும் ஒன்றே என்பதற்கு இன்னும் ஓர் ஆதாரம்.

மெய்கண்டாருடைய சீடராகிய சிவஞான வள்ளல் 'வள்ளலார் சாத்திரம்' எழுதியிருக்கிருர். அவர் சிறந்த சைவராகக் கொள்ளப்படுவது போலவே, சிறந்த அத்வைதியாகவும் கொள்ளப்படுகிருர்.

''சைவசித் தாந்தமெல்லாம்
தானவ ளுகிநிற்றல்;

மையறு வேத சித்த
மற்றது நானே யென்னல்;

உய்வகைக் கிரண்டு மொன்றென்
ரேதியென் னுயிர்க்கிலாபஞ்

செய்தசற் குரவனீயே
திருப்புலி வனத்துளானே''

என்று குருவைத் துதிக்கிருர்.

இதில் முத்திக்காம் அவ்விரண்டு சித்தாந்தங்களும் ஒன்றே என்று கூறுவதால், சைவசித்தாந்தமும் அத்வைதமேயாகிறது.

'சித்தியார்' என்னும் அருணந்தி சிவத்தின் நூலுக்கு முற்பட்ட சைவ நூல்களிலெல்லாம், அத்வைத வேதாந்தமே விசேஷித்துக் கூறப்படுகிறது. சிவஞான போதத்திலும் பழமையான திருவுந்தியார் என்னும் சைவ சாஸ்திரத்தில்,

''ஏகனுமாகி யனேகனுமானவன்
நாதனு மானுனென் றுந்தீபற
நம்மையே ஆண்டானென்
றுந்தீபற''

என்றும்,

''அகளமாய் யாரும் அறிவரி
தப்பொருள்
சகளமாய் வந்ததென் றுந்தீபற
தானுகத் தந்தென் றுந்தீபற''

என்றும் கூறப்பட்டிருக்கிறது.

இதனுல், ''ஏகனே அனேகமாயினுன்; அநேகமான பின், அவைகட்கு நாதனுக வேண்டி வந்தது. பின்பு, ஏகமெனும் அத்வைத தத்துவத்தை வெளிப்படுத்த, குருவாய் நம்மைவந்தாண்டான். அவன் ஏகனுயிருக்கும் போது அகளனுகவும், நாதனுய் நிற்கும் போது ஸகளன் (ஸகுணன்) ஆகவும் நிற்கிருன்'' என்னும் அத்வைத வேதாந்தக் கொள்கை தெளிவுறுத்தப்படுகிறது.

"மறைமுடி வாக்கியங்களுக்கெல்லாம் இரண்டற்ற பரம்பொருளைக் கூறுவதிலேயே கருத்து" என்று ஸ்ரீமத் சங்கர பகவத் பாதாசார்ய ஸ்வாமிகள் திருவாய் மலர்ந்தருளியிருக்கிறார்கள்.

இதுவரை கூறியவற்றால் என்ன தெரிகிறது?

துயருறும் ஏழைகளாம்மானிட மக்களைக் கருணையுடன் கைதூக்கி விடும் ஒரே நோக்கத்துடன் உழைக்கும் எல்லா நூல்களின் ஆசிரியர்களும், முக்தியையடைவதற்குப் படிப்படியாகஅமைத்த கருமம், பக்தி, வழிபாடு,யோகம் முதலிய கொள்கைகளில் வெளிக் கருத்துடையவராயினும், அவர்களுக்கு அத்வைதத்திலேதான் உள்கருத்து என்பது தெளிவாகத் தெரிகிறது.

"அத்வைதம்" என்பது வடசொல். ந+த்வைதம் = அத்வைதம். 'ந' 'அ' என்றும் மாறும். இது 'நஞ்' என்று கூறப்படும் இதற்கு இன்மை என்பது பொருள். த்வைதம் என்றால் வேறுபாடு. எனவே, அத்வைதம் என்ற சொற்கு "வேறுபாடு இல்லாதது" என்பது பொருள்.

'வேறுபாடு அல்லாதது' என்று பொருள் சொன்னால் என்ன?

பெரியோர் எல்லோரும் இன்மைப் பொருளையே கொண்டிருக்கின்றனர். சிவஞானபோத ஆசிரியரும், 8-ம் சூத்திரத்தில், "அந்நியமின்மையின் அரன் கழல் செலுமே' என்று இன்மைப் பொருளையே கொண்டிருக்கிறார்.

வியாகரண சாஸ்திரம் 'ந' என்னும் நகரத்திற்கு, அன்மை, இன்மை, உவமை முதலிய ஆறு பொருள்களையும் கூறி, பின்னர் இவ்வெல்லாப் பொருளுக்கும் பொதுப் பொருளாக, "நிவ்ருத்தம் அல்லது ஆரோபம்" என்பதைக் கூறியிருக்கிறது. 'ஆரோபம்' என்றால், ஓரிடத்தில் இல்லாத பொருள் அங்கு தோற்றுவது. இதைக்கொண்டு, "தோற்றம், அல்லது தோற்றமாம் த்வைதத்தின் நிவிருத்தி" என்னும் பொருளே ஸம்ஸ்கிருத இலக்கணப்படி அத்வைதமென்னும் சொல்லின் கருத்தாய் முடிகின்றது.

மஹாபாஷ்ய மியற்றிய பதஞ்சலி முனிவர் இவ்விதப்பொருளை கூறியிருக்கிறார்.

தத்துவம் பல விதம்



திருமுருக
கிருபானந்தவாரியார்

மனிதனுக்கு அரிய பெருமையைத் தருவது அறிவு. அறிவு என்ற ஒன்றிருந்தால், அவனிடம் மற்ற எல்லாம் இருந்தனவாகும்.

அறிவு என்ற ஒன்றில்லையானால் பொன், பொருள், மாடம், கூடம், மாளிகை, நிலம் புலம் முதலிய யாவும் இருப்பினும் பெருமையுண்டாகாது.

ஒருவனுடைய உடம்பில் வைர மோதிரம், நல்ல பட்டுச் சட்டை, விசிறி மடிப்புச் சரிகை அங்கவஸ்திரம், ஜவ்வாதுப் பொட்டு, மூக்குக் கண்ணாடி முதலிய எல்லாம் இருந்தன; ஆனால் உயிர் இல்லை. இத்தனையிருந்தும் உயிர் இல்லையானால் அந்த உடம்பைப் பெருமைப்படுத்தமாட்டார்கள். அது அருவருப்பைத் தரும்.

உயிர் என்ற ஒன்றிருந்து, ஆடை அணிகள் அதிகம் இல்லையானாலும் பெருமையடையும். அதுபோலவே அறிவு என்ற ஒன்று இருந்துவிட்டால், பொன் பொருள் இல்லையானாலும் ஒருவருக்குப் பெருமையுண்டாகும்.

இந்த இனிய கருத்தைத் திருவள்ளுவர், தனக்கு என்றமைந்த பாணியில், சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் அழகுடன் கூறுகிறார்.

''அறிவுடையார் எல்லாம்
உடையார் அறிவிலார்
என்னுடையரேனும் இலர்''

இனி, அறிவுக்கு ஓர் அடையாளம் உண்டு.

அது என்ன அடையாளம் தெரியுமா?

அஞ்சாமை

அஞ்சாமைதான் அறிவுக்கு அடையாளம். சிங்கம் போன்ற ஆண்மையும், அஞ்சாமையும் அறிவுடையவர்கள்பால் வீறிட்டு எழும்.

ஆனால் அஞ்சாமையுடையவர்கள் எல்லாம் அறிவுடையார் என்று கருதிவிடக் கூடாது.

பால் வெண்மையாக இருக்கும் என்றால், வெண்மையாகவுள்ள

சுண்ணும்புத் தண்ணீர் முதலிய வற்றைப் பால் என்று எண்ணி மருளக்கூடாது. மூடர்களிடமும் அஞ்சாமையிருக்கும். "குருட்டுக் கண் இருட்டுக்கு அஞ்சாது" என்பது பழமொழி.

எனவே அறிவின் சொரூபமாக வுள்ள ஆன்ருேர்கள் மலேயே வந்து தலேயில் வீழினும் அஞ்ச மாட்டார்கள். இதோ,

"நாமார்க்குங் குடியல்லோம்
நமனே அஞ்சோம்

நரகத்தில் இடர்ப்படோம்
நடலே யில்லோம்

ஏமாப்போம் பிணியறியோம்
பணிவோ மல்லோம்

இன்பமே எந்நாளும்
துன்பம் இல்லே"

"அல்லல் என்செயும்?
அருபிணி என் செயும்?
தொல்லே வல்வினேத்
தொந்தந்தான் என் செயும்?

தில்லே மாநகர்ச்
சிற்றம் பலவனுர்க்
கெல்லே யில்லதோர்
அடிமை பூண்டேனுக்கே"

"மண்பாதலம்புக்கு மால்கடல்
மூடி மற்றேழுலகும்

விண்பால் திசைகெட்(டு)
இருசுடர் விழினும் அஞ்சல்
நெஞ்சே"

"மலேயே வந்து விழினும்
மனிதர்கள்

நிலேயில் நின்று
கலங்கப் பெறுதிரேல்"

இப்படி சிங்கநாதம் புரிபவர் கட்டிளங் காளேயன்று; பெரிய முதியவர். அப்பர் பெருமானுடைய அஞ்சாத செஞ்சொல் வாசகங்கள்.

இவற்றை உணர்ந்து ஓதும் போது நமக்கும் நாடி நரம்பில் ஒரு முறுக்கேறுகின்றது.

இத்தகைய ஞான பரம்பரையில் வங்கத்திலே ஒரு சிங்கம் 1863-ல் அவதரித்தார்.

ஆ! ஆ! அந்த வீரரின் கதையைக் கேட்டு அமெரிக்கா அசைந்தது. அன்று பொழிந்த சொல் மழை இன்றும் தேங்கி நிற்கின்றது.

தங்கம் போன்ற மாசில்லாத அந்த வேதாந்த சிங்கத்தை, சிகாகோவுக்கு அனுப்பி உதவி செய்தார் பாஸ்கர சேதுபதி அவர்கள்.

இராமகிருஷ்ண குருதேவருடைய பரிபூரண ஆசியைப் பெற்று, சிகாகோ சர்வமத மாநாடு முடியுந் தருணத்தில் அரிதிலும் அரிதாகச் சிறிது நேரம் பெற்று, விவேக மழையை ஆனந்தமாகப் பொழிந்தார் விவேகானந்தர்.

அவர் ஆண்மைமிக்கவர்; அஞ்சாமையுடையவர்; சேவைக்கே தன்னே அர்ப்பணம் புரிந்தவர்.

அங்கு எல்லோரும் தங்கள் தங்கள் மதமே உயர்ந்தது, மற்றவையெல்லாம் தாழ்ந்தது, "எங்கள் மதத்தின் கொள்கையைக் கடைப்பிடித்து ஒழுகினுல் சுவர்க்கம் புகலாம். இல்லேயேல் நரகம் புகுந்து கெடுவீர்கள்" என்றெல்லாம் பேசினுர்கள்.

விவேகானந்தர் மனம் எழுந்தது. வீரவுணர்வால் இடிந்தது. ஞானவிளக்கத்தால் மின்னியது. வேதாந்தத் தேன்மழை பொழிந்தது. அத் தேன்மொழி புகுந்த செவியும் தித்தித்தது. அது தேங்கிய சித்தமும் தித்தித்தது. அந்த மகாவீர ஞானமூர்த்தியைக் கண்ட கண்ணும் தித்தித்தது. அவரைப் பற்றி பேசிய வாயும்

திக்கெட்டும் இப்படி எத்திக்கும் தித்திக்கப் பேசி உயிர்க் குலத்தைத் தழைக்கச் செய்தது அந்த அருள் மேகம்.

''அமெரிக்க தேசத்துச் சகோதர சகோதரிகளே! இறைவனுக்கு எம் மதமும் சம்மதம். நதிகள் பல்வேறு திசைகளிலிருந்து புறப்பட்டுப் பலப்பல கோணங்களுடன் வளைந்து ஓடினாலும், முடிவிலே ஒரே கடலைச் சென்றடைகின்றன.

''அதுபோல் சமயங்கள் பல்வேறு வண்ணங்களாக இருப்பினும், அவைகள் ஒரே பரம்பொருளைச் சென்றடைகின்றன.

''பசுக்கள் பல்வேறு நிறங்களுடன் காட்சி தருகின்றன; அவைகளின் பால் ஒரே நிறந்தானே? கருப்பு மாட்டில் கருப்புப் பாலும், சிவப்பு மாட்டில் சிவப்புப் பாலும், மஞ்சள் மாட்டில் மஞ்சள் பாலுமா கறக்கின்றன? பசுக்கள் பல மாறுபட்ட நிறங்களுடன் இருப்பினும், பால் வெண்மைதானே? அதுபோல் சமயங்கள் பல்வேறு வண்ணங்களாகக் காட்சியளித்தாலும், அவற்றின் முடிந்த உண்மை ஒன்றுதான்.

''பல மணிகளிலும் ஒரே நூல் இழைந்துள்ளதுபோல், பல சமயங்களிலும் ஒரே பரம்பொருள் தான் ஊடுருவியிருக்கின்றது.''

இந்த இனிய கனியமுதமன்ன ஞானமொழிகளைச் செவிமடுத்த அம்மாநாட்டு மக்கள் வியந்தார்கள்; நயந்தார்கள்.

பொறுமை

வீர முனிவராகிய விவேகானந்தர் பொறுமையின் பொக்கிஷமாகவும் விளங்கினார்.

சுவாமி விவேகானந்தர் பரிவ்ராஜத் துறவியாக யாத்திரை செய்து கொண்டிருந்தார்.

புகைவண்டியில் சுவாமிகள் சென்றுகொண்டிருந்தார். இடையில் இரு மாணவ இளைஞர்கள் அவ் வண்டியில் ஏறினார்கள். அந்த வாலிபர்கள் சுவாமிகளைப் பார்த்து, ''இத்தடியன் நாட்டுக்கு உதவாதவன்? சோம்பேறி; ஆளைப் பார்!'' என்பனவான பொருள் தரக்கூடிய சொற்களால் ஆங்கிலத்தில் வசைமாரி பொழிந்தார்கள்.

சுவாமிகளின் முகத்தில் அக்கொடுஞ் சொற்களைக் கேட்டு சலிப்போ வெறுப்போ ஏற்படவில்லை. புன்னகை தவழ்ந்த திருமுகத்துடன் இருந்தார். அவருக்கு ஆங்கிலம் தெரியாது என்ற எண்ணத்தில் அவர்கள் புன்மொழி மொழிந்து கொண்டிருந்தார்கள்.

இடையில் ஒரு சந்திப்பு நிலையத்தில் சுவாமிகளுக்குத் தெரிந்த ஒருவர் வண்டியில் ஏறினார். சுவாமிகளை வணங்கி, அவருடைய அடிபணிந்து ஆங்கிலத்தில் உரையாடினார். சுவாமிகள் தமருக்கு என்று அமைந்த நடையில் தேனுந் தலைகுனிந்து நாணுமாறு ஆங்கிலத்தில் விசாரித்தார்.

இதனைக் கேட்ட அந்த இளைஞர்கள் அயர்ந்து போனார்கள்.

''ஓ! இவருக்கு ஆங்கிலம் தெரிகின்றதே! நாம் இவரை ஆங்கிலத்தில் வைதோமே!'' என்று எண்ணி நாணினார்கள்.

''சுவாமி! தங்களுக்கு ஆங்கிலம் தெரிந்திருந்தும், எங்கள் வெஞ் சொற்களைக் கேட்டுத் தங்கள் திருமுகத்தில் ஒரு சிறு மாறுதலும் உண்டாகவில்லையே?'' என்றார்கள்.

அதற்குச் சுவாமிகள் சொன்ன பதில் மிக மிக உயர்ந்தது. அது என்ன?

''முட்டாள்களை நான் சந்தித்தது இதுமுதன் முறையன்று''


இந்தப் பதிலைக் கேட்ட அவர்கள் அப்படியே வெட்கித் தலை குனிந்தார்கள்.

இத்தகைய குணத்தில் தங்கமாக விளங்கியவர் வங்கத்தின் சிங்கம் விவேகானந்தர்.

அவர் ஏழைகட்கும், நோயாளிகட்கும் சேவை செய்தார். திரி எறிந்து நமக்கு ஒளி தருவது போல், சந்தனக் கட்டை தான் தேய்ந்து நமக்கு உதவுவதுபோல், சுவாமிகள் உடலை வருத்தி உலகுக்கு உழைத்தார்.

அவருடைய புகழ் எங்கும் நிலவுக!

★



பகவத் கீதையும் அதன் உரை ஆசிரியர்களும்

தமிழ்வாணன்

கீதையில் மொத்தம் பதினெட்டு அத்தியாயங்கள் உள்ளன.

ஒவ்வொரு அத்தியாயமும் ஒவ்வொரு யோகம் என்ற பெயரால் குறிப்பிடப்பட்டுள்ளது. முதலாவது அத்தியாயத்துக்கு விஷாத யோகம் என்று பெயர். இரண்டாவது, சாங்கிய யோகம். மூன்றாவது, கர்ம யோகம். இப்படியே பதினெட்டு அத்தியாயங்களும் பதினெட்டு யோகங்களாகப் பேசப்படுகின்றன.

இந்தப் பதினெட்டு யோகங்களையும் மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரித்துப் பேசுவது உரையாசிரியர்கள் மரபு.

கர்ம யோகம், ஞானயோகம் பக்தியோகம் என்பனவே அந்த மூன்று பிரிவுகள்.

பிரிவுகள் மூன்ருக இருந்தாலும், அவை அனைத்துக்கும் குறிக்கோள் ஒன்றே ஒன்றுதான்.

அதாவது, மனத்தின் விருத்திகளை ஒழித்து, அதனுள்ளே இருக்கும் கடவுளைக் காண்பது.

இந்தக் குறிக்கோளை அடைவதற்குக் கர்மயோகம் ஒரு வகையான வழியைக் காட்டுகிறது. ஞானயோகம் வேறு ஒரு பாதையைக் கூறுகிறது. பக்தி யோகம் இன்னொரு நெறியைத் தெரிவிக்கிறது. இவ்வளவே இவற்றிற்குள்ள வேறுபாடு.

இதை இந்த முறையில் ஏற்றுக் கொள்ளாமல், ''கீதையில் கர்ம யோகம்தான் வலியுறுத்தப்படுகிறது. ஞான யோகமும் பக்தி யோகமும் கர்மயோகத்தின் உட்பிரிவுகளே யன்றி வேறு அல்ல'' என்பார்கள் ஒரு சிலர். நமது தேசிய விடுதலை வீரர்களுக்குள்ளே தலையாயவராய் விளங்கிய திலகர் பெருமான், கீதையின் சாரமே கர்மயோகம்தான் என்ற கருத்தை உடையவர்.

''கீதையால் அறிவுறுத்தப்படுவது ஞானயோகமேயன்றி வேறு

எதுவும் அல்ல!'' என்பது ஆதிசங்கரரின் கொள்கை. கர்ம யோகமும் பக்தியோகமும் ஞான யோகத்தை அடைவதற்குரிய படிகளேயாகும் என்பது அவர் கருத்து.

''ஞானயோகமும் அல்ல, கர்ம யோகமும் அல்ல; பகவத்கீதை முழுக்க முழுக்க ஒரு பக்தியோக நூலே'' என்பது இராமாநுஜரின் கோட்பாடு. முதலில் கர்மயோகம் பயின்று, அதில் தெளிவு பெற்று ஞானயோகத்துக்கு வந்து, பிறகு அதிலும் சிறந்த புலமை பெற்ற பிறகே ஒருவன் பக்தியோகம் பயிலுதற்குரிய பண்புடையவன் ஆகிறான் என்பது அதன் பொருள்.

ஒவ்வொரு யோகமும் உயர்வு உடையதே!

கீதையில் இம்மூன்று வகையான கோட்பாடுகளுக்கும் அகச் சான்றுகள் இருக்கின்றன. எடுத்துக்காட்டாக, கர்மயோகத்தைப் பற்றிப் பேசும்போது —

'செயல் புரிவதற்கு மட்டுமே உனக்கு உரிமை உண்டு...செயலற்று இருக்க நீ ஆசைப் படாதே!'

'உன்னுடைய காரியங்களை ஒழுங்காகச் செய்து கொண்டு இரு. ஏனென்றால், செயல் இன்மையைக் காட்டிலும் செயல் புரிவதே மேலானது.'

'விருப்பு வெறுப்பு இல்லாமல் தன் காரியங்களைச் செய்து கொண்டிருக்கும் மனிதன், எல்லாவற்றினும் மிக மேலான நிலையை அடைகிறான்.'

'ஜனகன் முதலியவர்கள் தம் கடமைகளைச் செய்ததன் மூலமே குறைவற்ற பூர்ண நிலையை அடைந்தார்கள்.'

என்பனபோன்ற வாக்கியங்கள் கீதையில் காணப்படுகின்றன.

பின்னர் ஞானயோகத்தைப் பற்றிப் பேசும்போது, —

'எல்லாக் கர்மங்களும் ஞானத்தில்தான் முடிவடைகின்றன.'

'ஞானி வேறு நான் வேறு அல்ல.'

— இவை போன்ற உண்மைகளை அர்ச்சுனனுக்கு எடுத்துக் கூறுகிறார் கண்ணபிரான்.

பக்தியோகத்தைப் பற்றிப் பேசும்போது —

'ஐயப்பாடு நீங்கப் பெற்றவர்களாய், தன்னடக்கம் உடையவர்களாய், எல்லா உயிர்களிடத்தும் எவர்கள் அன்பு செலுத்துகிறார்களோ, அவர்களே பிரம்மத்தோடு இரண்டறக் கலக்கிறார்கள்.'

'எவன் ஒருவன் எல்லா உயிர்களிடத்தும் வெறுப்பு இல்லாமல் இருக்கிறானோ, அவனே இறைவனை அடைகிறான்.'

'எல்லா உயிர்களுக்கும் நன்மை செய்வதையே குறியாகக் கொண்டவர்கள், இறைவனை அடைகிறார்கள்.'

இம்மாதிரி வாக்கியங்கள் பகவத் கீதையில் இடம் பெற்றுள்ளன.

இறுதியாக, தியானத்தைப் பற்றிச் சொல்லும்போது —

'உள்ளத்தை ஒரு முனைப்படுத்த இயலாதவனுக்கு, அறிவில் தெளிவோ ஊக்கமோ

உண்டாகாது. ஊக்கம் இல்லாத உள்ளத்தில் அமைதி இருக்காது. அமைதி இல்லாதவனுக்கு ஆனந்தம் ஏது?

'இவ்வாறாக இடைவிடாது முயன்று எவன் ஒருவன் மனத்தைத் தன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருகிறானே, அவன் கடவுள் நிலைக்கே உரியவையான அமைதியையும் ஆனந்தத்தையும் அடைகிறான்.'

—என்றெல்லாம் பேசுகிறது கீதை.

தத்துவஞானிகளின் மாறுபட்ட கருத்துக்களுக்குக் காரணம் என்ன?

கீதையின் கூற்றுக்கள் இப்படி ஒன்றுக்கொன்று மாறுபட்ட நிலையிலே அமைந்திருப்பதன் உள் கருத்து என்ன? கீதையால் சிறப்பாகப் போற்றப்படுவது உண்மையில் கர்மயோகமா, ஞான யோகமா? பக்தியோகமா?

இந்த மூவகைப்பட்ட யோகங்களையும் சமமாகவே பாராட்டுகிறது பகவத் கீதை. அவற்றுள் எத்தகைய ஏற்றத் தாழ்வையும் அது ஏற்றுக் கொள்வதில்லை. எந்த யோகத்தைப் பின்பற்றினாலும் முடிவில் ஒருவன் எய்துகிற பயன் ஒன்றே ஒன்றுதான். அதுதான் கடவுள் நிலை. அப்படி இருக்கும் போது யோகங்களுக்குள்ளே இதுதான் சிறந்தது அதுதான் சிறந்தது என்று எதற்காகப் பேசப்பட வேண்டும்?

அப்படிப் பேசுகிறவர்கள் என்ன சதாரணமானவர்களா? உலகம்போற்றும் தத்துவஞானிகளான சங்கரரும் இராமாநுஜரும் மத்துவரும் அல்லவா அப்படிப் பேசுகிறார்கள். எனவே, அதைப் பற்றி நாம் சற்றுச் சிந்தித்துப் பார்க்க வேண்டியது இன்றியமையாதது ஆகிறது.

மூன்று நோயாளிகள் ஒரு மருத்துவரிடம் வருகிறார்கள் என்று வைத்துக் கொள்வோம். அந்த மூன்று பேருக்கும் ஒரே மருந்தைக் கொடுக்க மாட்டார் மருத்துவர். காரணம், அவர்கள் ஒவ்வொருவரும் வெவ்வேறு நோய் உடையவர்களாக இருப்பார்கள்.

மூன்று பேருக்கும் ஒரே நோயாக இருந்த போதிலும், அவர்களுடைய உடற்கூறு வெவ்வேறாக இருக்கும். ஒருவர் பருத்துக் கொழுத்த வாத உடல்காரராய் இருப்பார். மற்றொருவர் மெலிவுற்ற பித்த உடல்காரராய் இருப்பார். ஒரு தூற்றல் விழுந்தவுடனேயே தும்மத் தொடங்குகிற சிலேட்டும உடல்காரராய் இருப்பார் மூன்றாமவர்.

இந்த மூன்று பேருக்கும் காய்ச்சல் நோய் காண்கிறது என்று வைத்துக் கொள்வோம்.

நோய் ஒன்றுதான் என்றாலும், உடற்கூறு தெரிந்த மருத்துவர் மூவருக்கும் ஒரே மருந்தைக் கொடுக்க மாட்டார்.

அப்படி ஒரே மருந்தைக் கொடுத்தபோதிலும், அதனோடு கூட்டி உண்ண வேண்டிய துணைப் பொருள்களும் பத்தியங்களும் வெவ்வேறாகவே இருக்கும்.

உடற்கூற்றில் மூன்று வகைகள் இருப்பது போலவே, உள்ளத்தின் கூற்றிலும் மூன்று வகைகள் இருக்கின்றன.

செயலாளர்கள், சிந்தனையாளர்கள், உணர்ச்சியாளர்கள் ஆகியவர்களே அந்த மூவகைப் பிரிவுகளைச் சேர்ந்தவர்கள்.

இந்த மூவகையினருக்கும் உகந்த முறையில், கர்மயோகம், ஞானயோகம், பக்தியோகம் என்னும் மூவகை யோகங்களை விவரித்து இருக்கிறது பகவத் கீதை.

சங்கரர் இராமாநுஜர் போன்ற தத்துவஞானிகள் இம்மூவகை மக்களில் யாரேனும் ஒரு வகையினரை மட்டுமே கருத்தில் கொண்டு, தம் உபதேசங்களை நிகழ்த்தியிருக்கிறார்கள்.

எடுத்துக் காட்டாக, சங்கரரின் மாணவர்கள் பெரும்பாலும் சிந்தனையாளர்களே. இராமநுஜரின் மாணவர்கள் பெரும்பாலும் உணர்ச்சியாளர்களாவே இருந்திருப்பார்கள்.

சங்கரரும் இராமாநுஜரும் உட்கருத்தில் வேறுபாடு உடையவர்கள் அல்லர்

வாத உடல்காரனுக்கு உரிய மருந்து பித்த உடல்காரனுக்கு ஒத்துக் கொள்ளாதது போல, சங்கரரின் சிந்தனையாளர்களுக்கு உரிய உபதேசங்கள் இராமாநுஜரின் உணர்ச்சியாளர்களுக்குப் பயன்படா.

அவ்வாறே, இராமாநுஜரின் உபதேசங்கள் சங்கரரின் மாணவர்களுக்குப் பயன்படா.

இதனால் ஒருவரின் உபதேசங்கள் தாம் உயர்வானவை, மற்றவரின் உபதேசங்கள் மட்டமானவை என்று கருதிவிடக் கூடாது.

சிந்தனையாளர்களைப் பொறுத்தமட்டில், பக்தியோகமோ கர்மயோகமோ அவ்வளவாக அவர்களுக்குப் பயன்படாது அவர்களுடைய மனப்பண்புக்கு, ஞானயோகம் ஒன்றுதான் பயன் அளிக்க வல்லது. இதனாலேயே சிந்தனையாளர்களாகிய தம் மாணவர்களைக்கருத்தில்கொண்டு பகவத்கீதைக்கு உரை எழுதத் தொடங்கிய ஆதிசங்கரர், பக்தியோகத்தையும் கர்மயோகத்தையும் விட ஞானயோகமே தலை சிறந்தது எனக் கூறுகிறார்.

உணர்ச்சியாளர்களாகிய தம் மாணவர்களைக் கருத்திலே கொண்டு பகவத்கீதைக்கு உரை எழுதப் புகுந்த இராமாநுஜர், ஞானயோகத்தையும் கர்மயோகத்தையும் விடப் பக்தியோகமே தலை சிறந்தது எனக் கூறியதற்கும் இதுவே காரணம்.

சங்கரர் ஞானயோகத்துக்கு முதல் இடம் கொடுத்துப் பேசியதைக் கொண்டு, மற்ற யோகங்களை அவர் இழிவுபடுத்தி விட்டார் என்று எண்ண வேண்டுவதில்லை.

இராமாநுஜர் பக்தியோகத்துக்கு முதல் இடம் கொடுத்துப் பேசியதைக் கொண்டு மற்ற யோகங்களை அவர் இழிவுபடுத்தி விட்டார் என்று எண்ண வேண்டுவதில்லை.


சங்கரர் இராமாநுஜர் மத்துவர் போன்ற உயரிய தத்துவ ஞானிகளுக்கெல்லாம், அவர்களைப் பொறுத்த மட்டில் எல்லா யோகங்களும்சரிநிகரானவையே.

ஆனால் அவர்களுடைய மாணவர்களைப் பொறுத்த மட்டில், அதாவது, மாணவர்களுக்குப் பயன் அளிக்கும் தகுதியில், அந்த யோகங்களினிடையே ஏற்றத் தாழ்வுகள் உண்டு.

'கீதையின் சாரம் ஞான யோகமே' என்று சங்கரர் கூறியதையும், 'அல்ல அல்ல, அது பக்தி யோகமே,' என்று இராமாநுஜர் கூறியதையும் நாம் இந்த முறையில்தான் பார்க்க வேண்டும்.

அப்படிப் பார்க்கும்போது, சங்கரர் கூற்றுக்கும் இராமாநுஜர் கூற்றுக்கும் மேலெழுந்தவாரியாகத்தான் வேறுபாடு காணப்படுகிறதே தவிர, அவற்றின் உட்கருத்தில் எத்தகைய வேறுபாடும் இல்லை என்பது தெளிவாகத் தெரியும்!

வள்ளுவர் கூறும் பகுத்தறிவு



வேலவன்

" எப்பொருள் எத்தன்மைத்(து)
ஆயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப(து)
அறிவு "

என்கிறது குறள் மறை.

அதாவது, ஒரு பொருளானது எத்தகைய இயல்புடையதாய்க் காணப்பட்டாலும், அவ்வாறு காணப்படுகிற இயல்புகளை விடுத்து, அவ்வியல்புகளுக்கு நிலைக்களனாய் நிற்கும் உண்மைப் பொருளைக் கண்டு தெளிவதே பகுத்தறிவாகும் என்பது இதன் கருத்து.

இந்தக் குறட்பாவின்பொருளை விளக்குதற்காக, இதன் உரையாசிரியராகிய பரிமேலழகர் ஓர் அருமையான உதாரணம் தருகிறார். எப்படி யெனின்,—

சங்க இலக்கியமாகிய புறநானூற்றில், கோச்சேரமான் யானைகட் சேய் மாந்தரஞ் சேரல் இரும்பொறை என்னும் ஒரு மன்னனைப் பற்றிய செய்தி வருகிறது.

பெயர் மிக மிக நீளமாக இருக்கிறதல்லவா? இந்தப் பெயரை

1. கோ
2. சேரமான்
3. யானைக் கண்
4. சேய்
5. மாந்தரஞ்சேரல் இரும்பொறை.

என ஐந்து பகுதிகளாகப் பிரித்து, அவற்றைப் பின்வருமாறு ஆராய்கிறார் பரிமேலழகர்:

1. கோ என்றால் அரசன் என்று பொருள். இது அவன் பிறந்த சாதியைக் குறிக்கும் சொல்லாகும்.

2. சேரமான் என்பது அவன் பிறந்த குடியை அறிவிக்கும் வார்த்தை.

3. யானைக் கண் என்னும் பதம் அவனது வடிவத்தின் சிறப்பை எடுத்துரைக்கிறது. அதாவது, அவன் ஒரு மத யானையைப் போன்ற பார்வையைப் பெற்றிருந்தானும்.

4. சேய் என்பது அவனது பெற்ேறார்களால் அவனுக்கு இடப்பட்ட இயற்பெயர் போலும்.

5. மாந்தரஞ்சேரலிரும்பொறை என்பது அவனுக்கு மற்ேறார்களால் சூட்டப்பட்ட சிறப்புப் பெயர் (அதாவது, பட்டப்பெயர்) என்று தோன்றுகிறது.

இவ்வாறுவார்த்தை வார்த்தையாகப் பிரித்து அலசிப் பார்க்கும் போது, இவை யாவும் ஓர் உண்மைப் பொருள் மீது உலகத்தாரால் கற்பிக்கப்பட்ட கற்பனைகள் என்று தெரிகிறது.

உண்மையில் அரச சாதியென்று ஒரு சாதி கிடையாது. அந்தணர் வணிகர் வேளாளர் என்ற சாதிகளும் இயற்கையில் இல்லைதான். இவையெல்லாம் மக்கள் தமக்குத்தாமே வகுத்துக் கொண்டு வழங்கி வந்துள்ள கற்பனைகளே!

அவ்வாறே, இயற்கையில் சேரர்குடி என்று ஒரு குடி கிடையாது. சேரர் குடி, சோழர் குடி, பாண்டியர் குடி என்பதெல்லாம் மக்களால் கற்பிக்கப்பட்ட பெயர்களும் பிரிவுகளுமேயன்றி வேறல்ல.

அங்ஙனமே, அந்த மன்னனின் முகத்தில் யானைக் கண் ஏதும் இருந்ததில்லை; அவனுக்குரிய மனிதக் கண்தான் அங்கு இருந்தது. அந்த மனிதக் கண்ணில் யானையின் பார்வையைக் கண்டனர் புலவர் என்றால், அதற்கு அவர்களது கற்பனா சக்தியே காரணமாகும்.

சேய் என்று அவனது பெற்றோர்கள் அவனுக்குப் பெயரிட்டனர். அதைவிட்டு, ஆய் என்று அவனுக்கு அவர்கள் பெயரிட்டதாக வைத்துக்கொள்வோம். அதற்காக ஆள்மாறாட்டம் ஏற்பட்டுவிடுமா? எந்தப் பெயரை இட்டு அழைத்தாலும், அந்தக் குழந்தை அதுவாகத் தான் இருக்கும்; வேறொரு குழந்தையாக மாறிவிடாது. எனவே, அந்த இயற்பெயரும் அதற்கு இயல்பாக உரியதல்ல; கேவலம், கற்பனையே!

இயற்பெயரே இப்படியென்றால், அவனது சிறப்புப் பெயரைப்பற்றிச் சொல்ல வேண்டுமா? அதுவும் வெறும் கற்பனை தான்!

இங்ஙனம் கூர்ந்து நோக்கும் போது, அவனது பெயரில் அடங்கியுள்ள பல்வேறு சொற்களால் குறிக்கப்படும் இயல்புகள் யாவும் சுத்தமான கற்பனைகளேயன்றி, அப்பெயரினால் குறிக்கப் படுபவனோடு அவை உண்மையில் எந்த விதத்திலும் ஒட்டுபவையல்ல என்று தெற்றெனத் தெரிகிறது.

ஆனால் மேலெழுந்தவாரியாகப் பார்க்கும்போது, அந்த இயல்புகள் அல்லது தன்மைகள் அத்தனையும் அவனுக்கே உரியன போலத் தோன்றுகின்றன அல்லவா?

இவ்வாறு தோன்றும் தோற்றங்களை மெய்யென்று கொள்ளாமல், அத்தோற்றங்களுக்கெல்லாம் ஆதாரமாக விளங்கும் உண்மைப் பொருளையே நாம் உற்றுக் காண வேண்டும் என்கிறார் திருவள்ளுவர். அவ்வாறு

உற்றுக்காணும் அறிவுக்குத்தான் பகுத்தறிவு என்று பெயர்.

நாம் பொய்யுணர்வில் வாழ்கிறோம்!

இந்தப் பகுத்தறிவை மெய்யுணர்வு என்ற பெயரால் பிறிதொரு குறட்பாவில் குறிப்பிடுகிறார் பெருந்தகை வள்ளுவனார். அவ்வாறாயின், மற்றைப் புலன்களின் வாயிலாகக் கிடைக்கும் உணர்வெல்லாம் பொய்யுணர்வு என்று தெரிகிறது. இந்தப் பொய்யுணர்வில்தான் நாமெல்லாம் பொதுவாக வாழ்ந்து வருகிறோம். பொய்யுணர்வுக்கே மோகம் அல்லது அறியாமையென்னும் பெயரும் வழங்கப்படுகிறது. அதுவே நமது கவலைகள் அனைத்துக்கும் காரணமாக விளங்குகிறது.

இந்தப் பொய்யுணர்வின் இயல்பை இன்னும் சற்று விரிவாக விளக்க வேண்டியது அவசியமாகிறது.

ஓர் இந்தியனும் ஒரு பாகிஸ்தானியும் இங்கிலாந்துக்குச் சென்றார்கள். அங்கே ஓர் ஆங்கிலேயரின் வீட்டில் ஜனாப் முகமதலி ஜின்னாவின் படம் மாட்டப்பட்டிருந்தது. அதைப் பார்த்ததும் இந்தியன் முகத்தைச்சுளித்தான்; பாகிஸ்தானி பரவசமானான். காரணம், ஒரே தேசமாயிருந்த பாரதத்தை இந்தியா பாகிஸ்தான் என இரண்டு நாடுகளாகத் துண்டு போட்டவர் ஜனாப் ஜின்னா; எனவே, அவர் படத்தைப் பார்த்த மாத்திரத்திலேயே இந்தியனுக்கு ஆத்திரம் எழுந்தது. அதே சமயத்தில் பாகிஸ்தானி ஏன் பரவசமடைந்தான் என்றால், உலகில் பாகிஸ்தான் என்ற ஒரு புதிய தேசத்தையே தோற்றுவித்தவர் ஜனாப் ஜின்னா அல்லவா? அவர்தானே பாகிஸ்தானின் தந்தை? ஆகையால், அவருடைய படத்தைக் கண்டதும் அந்தப் பாகிஸ்தானிக்குத் தன்னுடைய சொந்தத் தந்தையைக் கண்டதுபோல் சந்தோஷம் பொங்கியது.

இவ்விருவர் கட்சியிலும் நியாயமிருக்கிறது. ஆனால் அந்த நியாயம் ஒருமுகப்பட்டதாயில்லை; இரண்டு முகங்களையுடையதாயிருக்கிறது. அந்த இரண்டு முகங்களும் வெவ்வேறு திசைகளில் திரும்பிக்கொண்டிருக்கின்றன. நியாயத்தின் உண்மையான இயல்பே அதுதான்! அதனாலேயே, ஒருவனுக்கு ஆனந்தத்தை உண்டு பண்ணுகிற காட்சி மற்றவனுக்கு ஆத்திரத்தை மூட்டுகிறது. ஆனால் அந்தப் படத்தைத் தன் வீட்டில் மாட்டி வைத்துக்கொண்டிருக்கும் ஆங்கிலேயனுக்கு, அந்தப் படத்தினால் ஆனந்தமும் ஏற்படவில்லை. ஆத்திரமும் ஏற்படவில்லை. உலகிலுள்ள அரசியல் தலைவர்களின் படங்களையெல்லாம் சேகரித்து, அவன் தன்னுடைய அறையில் மாட்டிவைத்திருக்கிறான். அவற்றுள் ஜின்னா படமும் ஒன்று; அவ்வளவுதான். அதைத் தவிர அங்கு காந்திஜியின் படம், நேருஜியின் படம், சர்ச்சிலின் படம், ஹிட்லரின் படம், ஸ்டாலினின் படம், ரூஸ்வெல்டின் படம், இவை போன்ற இன்னும் எத்தனையோ படங்கள் இடம்பெற்றிருக்கின்றன. இந்தத் தலைவர்களுக்குள்ளே எவரிடத்திலுமே அந்த ஆங்கிலேயனுக்கு விருப்பும் கிடையாது, வெறுப்பும் கிடையாது. ஜின்னாவின்பாலும் அவனுடைய மனப்பான்மை அத்தகையதே!

இதில் நாம் சிந்திக்க வேண்டிய ஒரு முக்கியமான விஷயம் இருக்கிறது. அதாவது, ஒரே படத்தைப் பார்த்துவிட்டு இந்தியனும் பாகிஸ்தானியும் வெவ்வேறு உணர்ச்சிகளை அடைந்தார்கள்; ஆனால் ஆங்கிலேயன் எந்த உணர்ச்சியையும் அடையவில்லை. இந்த மூன்றுவிதமான மனோநிலைகளில், வாஸ்தவத்திலேயே அந்தப் படத்திற்கு ஏற்புடையது எது ?

அதாவது, அந்தப் படத்தைப் பார்த்த மாத்திரத்தில் ஒருவன் வெறுப்படைகிறான்; மற்றொருவன் விழுந்து கும்பிடுகிறான். அப்படியாயின். உண்மையில் அந்தப் படம் விருப்புக்குரியதா, அல்லது வெறுப்புக் குரியதா?

விருப்பு வெறுப்பு இரண்டுமே அந்தப் படத்தில் கிடையாது. அதைப் பார்ப்பவரின் உள்ளத்தில்தான் இருக்கிறது.

ஆங்கிலேயன் உள்ளத்தில் விருப்புமில்லை, வெறுப்பும் இல்லை. எனவே அந்தப் படத்தினால் அவன் எவ்விதத்திலும் பாதிக்கப் படவுமில்லை.

''அந்தப் படம் எனக்கு ஆத்திரத்தை மூட்டியது'' என்கிறான் இந்தியன். அதன் பொருள் என்ன? ஒரு நியாய உணர்ச்சியுள்ள மனிதனுக்குக் கோபத்தை யெழுப்பக்கூடிய இயல்பு அந்தப் படத்தினிடத்தே யிருக்கிறது என்று அவன் நினைக்கிறான். இது உண்மையாயின், அதைக் கண்ணால் காணும் எல்லோருக்கும் கடுஞ்சினம் பிறக்க வேண்டும் அல்லவா? ஆனால் அப்படிப் பிறக்கவில்லையே ?

''அந்தப் படம் என் உள்ளத்தை உருக்கிவிட்டது'' என்கிறான் பாகிஸ்தானி. அதாவது, எந்த மனிதனையும் பயபக்தியால் பரவசமடையச் செய்யும் இயல்பு அந்தப் படத்தினிடத்தே யிருக்கிறது என்று அவன் திண்ணமாக எண்ணுகிறான். இது உண்மையாயின், அதன் எதிரே வந்து நிற்கும் எல்லோருமே இறும்பூது எய்த வேண்டுமே? அந்த இந்தியனும் ஆங்கிலேயனும் அப்படி எய்தக் காணோமே ?

எனவே, அந்தப் படத்தின் இயல்பு என்பதாக வாஸ்தவத்தில் எதுவுமே கிடையாது. அதைப் பார்த்துவிட்டு இன்புறுவதோ எரிச்சலடைவதோ நம் உள்ளத்தின் இயல்பாக இருக்கிறது. உள்ளத்தின் இயல்பைப் படத்தின்மேல் ஏற்றிப் பேசுகிறோம்.

நல்லவன் யார் ? கெட்டவன் யார் ?

படத்திற்குக் கூறப்பட்ட இந்த உண்மை, மனிதர்களுக்கும் பொருந்தும்!

சில மனிதர்களை நல்லவர்களென்று மதித்து, அவர்கள்பால் விருப்பம் கொள்கிறோம். வேறு சில பேர்களைத் தீயவர்களென்று எண்ணி வெறுப்புக் கொள்கிறோம். இது உலக இயல்பு.

ஆழ்ந்து நோக்குவோமேயானால், எந்த ஒரு மனிதனும் நல்லவனல்ல; அவன் கெட்டவனுமல்ல!

நல்லவனாயிருத்தல் என்பது ஒருவனுடைய உண்மை இயல்பா

யிருக்குமாயின், உலகில் அவன் எல்லோராலும் நல்லவனென்று போற்றப்படவேண்டும். புத்தர் பிரான், ஏசுநாதர், காந்தி யடிகள் போன்ற மகான்களே இவ்வாறு போற்றப்பட்டதில்லை; அவர்களைத் தூற்றுபவர்களும் இருந்தார்கள், இருக்கிறார்கள்.

அதேபோல, கெட்டவனுயிருத் தல் என்பது ஒருவனுடைய உண்மை இயல்பாயிருக்குமாயின் உலகில் அவன் எல்லோராலும் கெட்டவனென்று தூற்றப்பட வேண்டும். ஹிட்லரும் செங்கிஸ் கானும்கூட இவ்வாறு தூற்றப் பட்டதில்லை; அவர்கள் காலத் தில் அவர்களைப் போற்றுபவர் கள்தான் அதிகம் இருந்திருக்கி றார்கள்!

ஒரு பொருளிலிருந்து அத னுடைய எந்த இயல்பை அல்லது குணத்தை வேறு பிரிக்க முடி யாதோ, அதுவே அப்பொருளின் உண்மை இயல்பு என்று சொல் லப்படும்.

ஒளி யென்பது கதிரவனது
உண்மை இயல்பு.

சூடு என்பது நெருப்பினுடைய்
உண்மை இயல்பு.

ஒளி யென்பது சங்கீதத்தின்
உண்மை இயல்பு.

குளிர்ச்சி யென்பது பனிக்கட்டி
யின் உண்மை இயல்பு.

பனிக்கட்டியில் சூடேற்றி அதன் குளிர்ச்சியைப் போக்க முயன்றால், அந்தப் பனிக்கட் டியே அழிந்து போய்விடும்.

அதேபோல, நெருப்பின்மேல் தண்ணீரைக் கொட்டி அதன் சூட்டினை ஆற்ற முயன்றால், அந்த நெருப்பே அழிந்து போய் விடும்.

இதுவே உண்மை இயல்பு என் பதன் இலக்கணமாகும்.

ஒரு பொருளின் உண்மை இயல்புதான் அதனுடைய சொரூபம் (அதாவது, சொந்த வடிவம்) என்று சொல்லப் படுகிறது.

அப்படிப் பார்க்கும்போது, எந்த மனிதனும் அவனுடைய சொரூபத்தில் (அதாவது, உண்மை இயல்பில்) நல்லவனும் அல்ல; கெட்டவனுமல்ல. ஏனெ னில் அவன் சில பேருக்கு நல்ல வனுயிருக்கிறான்; சில பேருக்குக் கெட்டவனுயிருக்கிறான். அது மட்டுமல்ல; ஒரு மனிதனுக்கே அவன் சில சமயங்களில் நல்லவனு யிருக்கிறான்; சில சமயங்களில் கெட்டவனுயிருக்கிறான்.

ஒருவன் நமக்கு விருப்பமான முறையில் நடக்கும் போது, அவனை நல்லவன் என்கிறோம்.

அவனே நமக்கு வெறுப்பான முறையில் நடக்கும்போது, அவ னைக் கெட்டவன் என்கிறோம்.

எனவே, ஒருவனை நல்லவன் ஆக்குவதும் கெட்டவன் ஆக்கு வதும், நம் உள்ளத்திலுள்ள விருப்பும் வெறுப்புமே யன்றி வேறெதுமல்லவென்று தெரிகிற தல்லவா?

✱

என்னைப் பற்றி

நான்

அறிந்திருப்பவை



மகாத்மா காந்தி

என்னவோ 'காந்தி சொன்னதுதான் சரி' என்று சொல்கிற ஒரு காலம் நிச்சயமாய் வருமென்றே நான் நம்புகிறேன். அது ஒரு வேளை நான் மரித்த பிறகு வரலாம்!

'மகாத்மா' என்னும் பட்டத்தை நான் மதிக்கவில்லை. பல முறைகளில் எனக்கு அப்பட்டம் பெரிதும் மனத்துன்பத்தைத் தான் தந்திருக்கிறது. எக்காலத்திலும் ஒரு கணப் பொழுதாவது அப்பட்டத்தினால் நான் பெருமைப்பட்டுக் கொண்டதாக எனக்கு ஞாபகமில்லை!

என்னை மகாத்மா என்று கூறிப் பனிப் பாங்கான இமயமலையின் சிகரம்வரை ஏற்றி வைத்து விட்டு, இவ்வளவு மாபெரும் மகாத்மாவின் போதனைகளைப் பின்பற்றுவது என்பது முடிகிற காரியமா என்று கூறி என் காலை வாரிவிடப் பார்க்கிறீர்களா?

பொருட்காட்சி சாலையில் வைத்துள்ள ஒரு ஜந்துவின் நிலையில்தான் நான் இருக்கிறேன்!

நான் பாமர மக்களில் ஒருவன்! எப்பொழுதும் அவ்விதமிருக்கவே விரும்புகிறேன். நீங்கள் எனக்குத் தந்த கௌரவம் என் தலையைச் சுற்றச் செய்யாமலிருக்க வேண்டுமென இறைவனை இறைஞ்சுகிறேன்.

எல்லாவற்றையும் நான் அறிந்து விடவில்லை. இந்த உணர்ச்சி யொன்றே எனக்கு மனோபலத்தைத் தருவதாகஇருக்கிறது. என்னுடைய வாழ்க்கையில் ஏதோ சில காரியங்களை நான் சாதிக்க முடிந்ததென்று சொன்னால், மற்றெதையும்விட இந்த உணர்ச்சிதான் முக்கியமான உதவியாக இருந்திருக்கிறது!

என்னைச் சந்நியாசி என்று அழைப்பது தவறாகும்! என் வாழ்க்கையை ஒழுங்குபடுத்தும் இலட்சியங்களெல்லாம் மனித ஜாதி அனைத்தும் பொதுவாக

ஏற்றுக் கொள்வதற்காக உள்ள வையே!

என் சொந்த வாழ்வில் பல தரம் அனுஷ்டித்துப் பார்க்காத ஒன்றை, மற்றவர்கள் செய்யும் படி நான் சொன்னதே கிடையாது! இதுதான் எனது பலம்.

என் அழுகை உபவாசமாக வெளிப்படுகிறது!

நான் சொல்லுகிற கருத்தே சரி என்பதில் எனக்கு அசைக்க முடியாத நம்பிக்கை உண்டு.

பிரார்த்தனை என்பது எனக்கு மனோபலத்தை அருளும் அகச் சாதனம்! உபவாசம் என்பதோ என் உடலைத் தாங்கும் ஊன்று கோலாய் விளங்கும் புறச் சாதனம்!

சத்தியம், அகிம்சை இவற்றின் அதி தீவிரமான தன்மையே எனது சித்தாந்தம்!

பகவத் கீதைதான் என் தாய்.

எனது குறிக்கோள் உலகம் முழுவதுடன் நட்புறவாடுவது தான்!

என்னை நான் கிழவன் என்று எண்ணியதே கிடையாது!

புகழ் என்னும் கன்னி என்னை மணப்பதாயிருந்தால், என் நிலை நிர்க்கதியாகிவிடும். அதனால் நான் புகழ் வேண்டுமென்று அழப் போவதில்லை!

நெஞ்சிலே கொந்தளிப்பு இருந்தாலும், வெளியே புன்னகை செய்ய என் மனத்தைப் பழக்கியிருக்கிறேன்!

நியாயமற்ற அனேக வழிகளில் எனது பெயர் உபயோகப்பட்டு வருவதை நான் அறிவேன்!

என்னுடைய மதம் சிறைச் சாலை போல மற்றவர்களை வெளியே ஒதுக்கும் மதமல்ல! அதன் வாசல் எப்போதும் திறந்தே கிடக்கும். கடவுள் படைப்பிலே மிகத் தாழ்ந்த ஜீவனுக்கும் அங்கே இடமுண்டு. ஆனால் இறுமாப்பு, ஜாதித் திமிர், நிறத் திமிர், மத விரோதம் ஆகியவற்றிற்கு அங்கே இடமில்லை!

என் மதம் என்பது சத்தியம்! அகிம்சைதான் அதை அடையும் ஒரே வழி!

என்னுடைய வழியைத் தவிர வேறு வழியோ, நல்ல வழியோ இருக்க முடியாது என்று கருதக் கூடிய கர்வியல்ல நான். ஆனால் எந்த வழியைப் பின்பற்றினாலும் மக்கள் கோழைகளாக ஆகிவிடாமல் இருந்தால் போதுமானது!

என்னைப் பின்பற்றுங்கள் என்று நான் யாரையும் வருந்தியழைக்கவில்லை ஒவ்வொருவரும் அவரவருடைய அந்தராத்மாவின் குரலைக் கேட்டு அதன் பிரகாரம் நடக்க வேண்டும். அது இயலாவிட்டால் தம்மால் இயன்றவரை எல்லாம் செய்ய வேண்டுமே தவிர, பிறரைப்போல் வெறுமே நடிக்கக் கூடாது!

எனக்குத் தெரிந்தவரை என்னுடைய குடும்ப வாழ்க்கையிலும் சரி, சமூக வாழ்க்கையிலும் சரி, ஒரு தடவையாவது வாக்குறுதி கொடுத்தபின் அதை மீறியதே இல்லை!

என் வாழ்க்கை என்பதே ஒரு திறந்த புத்தகம்! என் மதம் என்பதோ, அதற்கு நீங்கள் என்ன பெயரிட்டாலும் சரி, சகல நல்ல பண்பாடு, களையும் வாழ்க்கையில் கைக் கொள்ள வேண்டுமென்கிறது!

தாய்நாட்டின் சேவைக்காக, என் வாழ்வு அனைத்தையும் நான் அர்ப்பணித்திருக்கிறேன். இந்தச் சேவை இல்லாவிடில் என் வாழ்க்கையே எனக்குத் தாங்க முடியாத சுமையாகிவிடும்!

எவராவது என் கன்னத்தில் அடிக்க நேர்ந்தால், என் தலையை வெட்டவும் அவரை அனுமதிப்பேனே தவிர, எவருக்கும் தலை குனியவே மாட்டேன்!

உலகின் எந்தப் பகுதிக்கு நான் சென்றாலும் என் சொந்த வீட்டில் இருப்பது போன்ற உணர்ச்சியே எனக்கு ஏற்படுகிறது என் சொந்த வீட்டில் இருப்பது போலவே நடந்து கொள்வேன்! இது என்னுடைய நற்பாக்கியமே!

உங்களில் சிலர் 'காந்தி பக்தர்' என்று சொல்லப்படுகிறார்கள். அந்தப் பெயர் பிரயோஜனமில்லை. அதைவிட 'அகிம்சா பக்தர்' என்று சொன்னால் என்ன? ஏனென்றால் காந்தி என்பவரிடம் நன்மையும் தீமையும், பலமும் பலவீனமும், அகிம்சையும் இம்சையும் கலந்தே காணப்படுகின்றன. ஆனால் அகிம்சையோ எந்தவிதக் கலப்பும் அற்ற தூய வடிவமாகும்!

நீங்கள் பொதுமக்களுக்குப் பணியாற்றுவதன் மூலம் உங்கள் அன்பிற்கு ஓர் உருவம் கொடுத்தால் மட்டுமே, நீங்கள் என்னிடம் காட்டும் அன்பிற்கு அர்த்தம் உண்டு!

இறந்து போனவரின் கனவை உயிரோடிருப்பவர்கள் நனவாக்கினால்தான், இறந்தவரின் ஆத்மா சாந்தி அடையும்!

❋

உ

திருச்சிற்றம்பலம்

கருணை நிறைந் தகம் புறமும் துளும்பிவழிந்
துயிர்க்கெல்லாம் களைக ணாகித்
தெருள்நிறைந்த இன்பநிலை வளர்க்கின்ற
கண்ணுடையோய்! சிதையா ஞானப்
பொருள்நிறைந்த மறையமுதம் பொழிகின்ற
மலர்வாயோய்! பொய்ய னேன்றன்
மருள்நிறைந்த மனக்கருங்கற் பாறையும்உட்
கசிந்துருக்கும் வடிவத் தோயே!

உலகநிலை முழுதாகி ஆங்காங் குள்ள
உயிராகி உயிர்க்குயிராம் ஒளிதா னாகிக்
கலகநிலை அறியாத காட்சி யாகிக்
கதியாகி மெய்ஞ்ஞானக் கண்ண தாகி
இலகுசிதா காசமதாய்ப் பரமா காச
இயல்பாகி இணையொன்றும் இல்லா தாகி
அலகில்அறி வானந்த மாகிச் சச்சி
தானந்த மயமாகி அமர்ந்த தேவே !

—திருவருட்பா

தமிழகத்தின் தனிச் சிறப்பு

பரந்த மக்கட் சமுதாயமுள்ள தமிழ் நாட்டைப் போன்ற இடத்தில், மக்களைப் புரிந்து கொள்ளுவதற்கே நாட்கள் அதிகம் தேவை. அமெரிக்க மக்கள் வாலிபர்களாக இருக்கிறார்கள். அவர்களது சிந்தனை எல்லாம் குழந்தைகளையொத்த சிந்தனை. ஆகையால் அமெரிக்க மக்களைப் புரிந்து கொள்வது கஷ்டமில்லை. அமெரிக்கப் பண்பாடு 400 ஆண்டுகளுக்கு உட்பட்டதுதான். ஆனால் தமிழ் நாட்டின் பண்பாடு 5,000 ஆண்டுக்கும் முற்பட்டது. இப்பக்கத்து இலக்கியங்கள் 2,000 வருடங்களுக்கு முன்பு ஏற்பட்டவை. இவ்வளவு பழமையானகாலத்தில் ஏற்பட்ட இந்த இலக்கியங்கள் ஆயிரக்கணக்கான வருடங்களாகத் தொடர்ந்து இருப்பது போல உலகில் வேறு இலக்கியங்கள் வெகு சிலவேஇருக்கின்றன.

தமிழ் இலக்கணம்கூட 2,000 வருடங்களுக்கு முற்பட்டது. ஆங்கிலம் உலகமெல்லாம் வழக்கிலிருக்றது. ஆனால் 600 வருட காலமாகத்தான் அது வழக்கிலிருந்து வருகிறது. ஆங்கிலத்தில் 800 ஆண்டுகளுக்கு முன்பு எந்தவிதமான இலக்கியமோ இலக்கணமோ கிடையாது. மேலும் ஆங்கிலத்திலுள்ள மிகப் பழைய இலக்கியத்தை தற்காலத்தில் படித்துப் புரிந்து கொள்ள



ஆசார்ய விநோபா

முடியாது; மக்கள் படிப்பதும் இல்லை. ஆனால் தமிழ் நாட்டில் 2,000 வருடங்களுக்கு முன்பு ஏற்பட்ட திருக்குறளை தற்காலத்தில் ஒவ்வொரு குழந்தையும் கையில் வைத்திருக்கிறது. அதில் பழமையான சொற்கள் சிலஇருந்தாலும் சிறிது முயற்சி செய்தால் அதைப் புரிந்துகொண்டு விடலாம்; புரிந்துகொள்ளவும் செய்கின்றனர். இவ்வாறு தமிழ் நாட்டு மக்கட் சமூகம் பரம்பரையாக விடாமல் தொடர்ந்து வளர்ந்து சூட்சுமமாக அமைந்துவிட்டது.

தமிழகம் பாரதப் பண்பாட்டின் உறைவிடம்

தமிழகத்தில் நான்அனுபவித்த மற்றொரு விஷயமும் கூறுகிறேன். பாரதீய கலாச்சாரம் பஞ்சாபில் ஆரம்பித்தது. வெளி நாட்டுத் தாக்குதல்கள் முதலில் அங்குதான் நிகழ்ந்தன. வரலாற்றுப் போர்கள் அனைத்தும் வடக்கில் பஞ்சாப் பக்கமிருந்துதான் துவக்கப்பட்டுள்ளன. ஆகவே அங்கிருந்த பாரத நாட்டுப் பண்பாடு மெதுவாக நகர்ந்து தென்னாட்டை அடைந்திருக்கிறது. இதற்கும் தெற்கே அலைகடல்தான். எனவே இது இனியும் நகரமுடியாது. நான் தூய்மையான வடிவத்தில் பாரதப்பண்பாடு தமிழகத்தில் காட்சி தருகிறது என்று உணர்கிறேன். இங்குள்ள உடை மிகவும் சாதாரணமானது. இவ்வளவு எளிய உடையை வேறு எந்தப் பகுதியிலும் நாம் பார்க்க முடியாது.

தமிழர் தம் சிறப்பு

தமிழ் நாட்டார் பராக்கிரமத்தில் குறைந்தவர்களா? அவர்களிடம் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட பண்டைய இலக்கியம் இருக்கிறது. அவர்களுக்கு போதிக்கக் கூடியதாக நம்மிடம் விஷயமொன்றும் இல்லை. அவர்களே ஒன்றல்ல, இரண்டல்ல, நான்கு பெரிய சாம்ராஜ்யங்கள் அமைத்து ஆண்டிருக்கிறார்கள், அசோகனுடைய ஆட்சி இந்தியாவெங்கும் பரவிய போதிலும் அவர்களை அணுகவே முடியவில்லை. இன்று அவர்கள் நினைத்தால் எவ்வளவோ செய்யலாம். ஆனால் இதற்கு ஸ்தாபனங்களைத் தூக்கி எறிவதற்கும் தகர்ப்பதற்கும் சக்தி வேண்டும்.

என்னுடைய மனத்தில் பண்டைய இலக்கியங்களின் கருத்துக்கள் இடம் கொண்டுள்ளன. நான் அதிலிருக்கும் தவறான விஷயங்களையும் அப்படியே நம்புகிறேன் என்பதல்ல. ஆனால் அவற்றில் காணப்படும் நல்ல விஷயங்கள் அனைத்தையும் அப்படியே ஒப்புக்கொள்ளுகிறேன். இவ்வாறான இலக்கியங்களில் பாகவதமும் ஒன்று.

இந்த உலகத்தில் கடவுள் பக்தி மங்கினாலும்கூட, திராவிட நாட்டில் பக்தி குறையாது என்று அதில்குறிப்பிடப்பட்டிருக்கிறது. இவ்வாறு சொல்ல என்ன ஆதாரம் இருக்கிறதென்று எனக்குத் தெரியாது. ஏதாவது இருக்குமென்று நம்புகிறேன். இந்தப் பகுதியில் நான் எந்த சிறிய ஊருக்குச் சென்றாலும் அங்கே பெரிய பெரிய ஆலயங்கள் இருப்பதைப் பார்க்கிறேன். ஒவ்வொரு கிராமத்திலும் கோயில் இருக்கிறது. வட நாட்டில் பெரிய கோயில்கள் சிற்சில இடங்களில் தான் இருக்கின்றன. ஆனால் இங்கு ஒவ்வொரு இடத்திலும் பெரிய கோவில்கள் இருக்கின்றன. அவைகளைத் தாய்மார்கள் தங்களுக்கு நன் மக்கட்பேறு உண்டாக வேண்டுமென்று பிரார்த்தித்துக் கொண்டு வலம் வருகிறார்கள்.

தழைத்திடும் தருமம்

உலகில் தருமம் குன்றிவிட்ட போதிலும் காவிரியாற்றங்கரையிலும், தாமிரபரணி ஆற்றின் கரையிலும் தருமம் நிலைத்திருக்குமென்று பாகவதம் கூறுகிறது. பாரதநாடு உலகம் முழுவதிலும் சிறந்தது. உலகிலேயே தருமம் மறைந்தபோதிலும் திராவிட நாட்டில் அந்த தருமம் நிலைத்திருக்குமென்றால், இவ்வாறு சொன்னது குறுகிய அபிமானத்தால் அல்ல, ஏனெனில் பாகவத கர்த்தா அகங்காரியல்ல. இதை நாம் அப்படியே ஒப்புக்கொள்ள வேண்டியதே.

திட்டமிட்ட வாழ்க்கை

இந்தப் பக்கம் கோயிலை மையமாக வைத்து அதைச் சுற்றிலும் சிறிய மண் வீடுகளைக் கட்டிக்கொண்டு மக்கள் இங்கு வாழ்கிறார்கள். ''இந்த கிராமத்தில் இருப்பவை அனைத்தும் ஆண்டவனுக்குச் சொந்தம்'' என்பதைக் காட்ட, கோயிலை நடுவண் வைத்திருக்கிறார்கள். இம்மாதிரியான திட்டம் வேறு எந்த நாட்டிலும் இல்லை. நிலம் ஆண்டவனுடையது என்று கருதுகிறார்கள். நிலத்தைத் தங்களுடையதாக மக்கள் எண்ணவில்லை. திருக்குறள் காலம் முதல் இன்றுவரை தோன்றியுள்ள இலக்கியங்கள் எதிலும் நிலம் தனிப்பட்டவர் சொத்து என்று எடுத்துக் காட்டப்படவில்லை.

உ

திருச்சிற்றம்பலம்

திருவிளங்கச் சிவயோக சித்தியெலாம் விளங்கச்
சிவஞான நிலைவிளங்கச் சிவானுபவம் விளங்கத்
தெருவிளங்கு திருத்தில்லைத் திருச்சிற்றம்பலத்தே
திருக்கூத்து விளங்கஒளி சிறந்ததிரு விளக்கே!
உருவிளங்க உயிர்விளங்க உணர்ச்சியது விளங்க
உலகமெலாம் விளங்கஅரு ளுதவுபெருந் தாயாம்
மருவிளங்கு குழல்வல்லி மகிழ்ந்தொருபால் விளங்க
வயங்குமணிப் பொதுவிளங்க வளர்ந்தசிவக்கொழுந்தே!

அன்பெனும் பிடியுள் அகப்படும் மலையே!
அன்பெனும் குடில்புகும் அரசே!
அன்பெனும் வலைக்குட் படுபரம் பொருளே!
அன்பெனும் கரத்தமர் அமுதே!
அன்பெனும் கடத்துள் அடங்கிடும் கடலே!
அன்பெனும உயிர்ஒளிர் அறிவே!
அன்பெனும் அணுவுள் அமைந்தபே ரொளியே!
அன்புரு வாம்பர சிவமே!

—திருவருட்பா

[நச்சுப் பொய்கையின் கரையிலே, தருமபுத்திரருக்கும் கொக்கு வடிவில் காட்சியளித்த யக்ஷனுக்கும் நிகழ்ந்த சம்வாதத்தின் ஒரு பகுதியைச் சென்ற இதழில் கண்டோம். யக்ஷனது கேள்விகளையும், அவற்றிற்குத் தருமபுத்திரர் அளித்த அருமையான பதில்களையும் இப்போது தொடர்ந்து படியுங்கள்.
—ஆசிரியர்]

நச்சுப் பொய்கை

ஆர். முத்துக்கிருஷ்ண சாஸ்திரிகள்

கேள்வி: எது இல்லாமல் யஜ்ஞத்தை அனுஷ்டிக்க முடியாது?

பதில்: ரிக் இல்லாமல் யஜ்ஞத்தை அனுஷ்டிக்க முடியாது.

(ரிக் என்றால் இங்கு வேதவாக்கு. ஆத்மஞானமாகிற யஜ்ஞத்தை வேதவாக்கினால்தான் நிறைவேற்ற முடியும். பிராணன், மனஸ் இவற்றைவிட வேதவாக்கு இந்த யஜ்ஞத்திற்கு மிக அவசியம். ஆதலால்தான் ''ஔபனிஷதம் புருஷம் ப்ருச்சாமி'' என்று உபநிஷத் கூறுகின்றது.)

கேள்வி: தேவர்களைக் குறித்து செய்யப்படும் யாகத்திற்குச் சிறந்த பயன் யாது?

பதில்: மழை. (மழை எல்லா உலகத்திற்கும் திருப்தியை அளிக்கின்றபடியால் அதுவே சிறந்த பயனாகும்.)

கேள்வி: பித்ருக்களைக் குறித்து செய்யப்படும் தர்ப்பணத்திற்கு முக்கிய பயன் யாது?

பதில்: நல்ல புத்திரன், தனம் முதலியவை.

(ஆயுள், பிரஜை, தனம், வித்யை, சுவர்க்கம், மோக்ஷம், சுகம், ராஜ்யம் இவை எல்லாவற்றையும் உங்கள் தர்ப்பணத்தால் திருப்தியடைந்த பித்ருக்கள் உங்களுக்கு அளிக்கட்டும் எனக் கூறப்பட்டிருக்கிறது.)

கேள்வி: இவ்வுலகில் சுக வாழ்வை விரும்புகின்றவர்களுக்கு முக்கியமானது எது?

பதில்: பசுக்கள்.

(பசுக்களே சிறந்த ஸம்பத் என்று பல நூல்களிலும் கூறப்பட்டிருக்கிறது. ''வித்யதே கோஷு ஸம்பந்நம்'' என்ற ராமாயண சுலோகத்தைக் காண்க).

கேள்வி: ஸந்ததியை விரும்புகின்றவர்களுக்கு மிகவும் சிறந்த ஸந்ததி யாது?

பதில்: பிள்ளை.

(பெண் வயிற்றில் பிறந்த பிள்ளை முதலியவர்கள் ஒருவாறு

ஸந்ததி எனக் கூறப்பட்டிருந்த போதிலும், அவர்கள் எல்லோரையும்விடத் தன் சொந்த பிள்ளையே சிறந்த ஸந்ததியாவான்).

கேள்வி: ஒருவன் சப்தம், ஸ்பரிசம் முதலிய விஷயங்களையெல்லாம் இந்திரியங்களால் அனுபவித்து வருகின்றான். ''சிறந்த அறிவாளி, தனம் முதலியவை உள்ளவன்'' என உலகத்தினரால் போற்றப்படுகின்றான். ஏராளமாக தானம் செய்யத் தகுதியுள்ளவன் என்றும் பலரால் கருதப்படுகின்றான். உயிருடனும் இருக்கின்றான். இருந்தாலும் பிழைத்திருப்பவனாகக் கருதப்படவில்லை. யார்?

பதில்: தேவதைகள், பித்ருக்கள், ஊழியம் செய்கின்றவர்கள், அதிதிகள் இவர்களுக்குஅந்தந்தக் காலத்தில் அளிக்கவேண்டியதை அளிக்காமல், தானும் அனுபவிக்காமல் இருப்பவனே உயிருடனிருந்தும் பிழைத்திருப்பவனாகக் கருதப்படுவதில்லை. (அவனையே ''ஜீவன்ம்ருதன்'' எனக் கூறுவர்.)

கேள்வி: பூமியைவிடப் போற்றத் தகுந்தவள் யார்?

பதில்: தாய்.

கேள்வி: ஆகாயத்தைவிட உயர்ந்தவன் யார்?

பதில்: தந்தை. (தாய் தந்தையர்களுக்குப் பணிவிடை செய்ய வேண்டுமெனக் கருத்து).

கேள்வி: காற்றைவிட வேகமாகச் செல்லக் கூடியது எது?

பதில்: மனது.

கேள்வி: புற்களைவிட மிக அதிகமானது எது? (புற்களைவிடப் பயனற்றது எது என்றும் ஒரு பாடமுண்டு.)

பதில்: கவலை.

(கவலைப்பட ஆரம்பித்தால் அது மேன்மேலும் வளர்ந்து கொண்டேபோகும். கவலைப்படுவதால் சொற்பப் பயன்கூட இல்லை. ஆதலால் மனத்தை அடக்கிக் கவலையையும் ஒழிக்க வேண்டுமெனக் கருத்து).

கேள்வி: எது தூங்கும்பொழுது கண்களை மூடுவதில்லை?

பதில்: மீன். (ஜீவன் ஸுஷுப்தி காலத்தில் பிருஹ்ம ஸ்வரூபத்தில் லயித்திருக்கின்றபடியால் அவனுக்கு எப்பொழுதும் 'திருஷ்டி' எனப்படும் அறிவு குன்றுவதில்லை.)

கேள்வி: பிறந்தவுடன் அசையாமலிருப்பது எது?

பதில்: முட்டை.

(பிண்டம் எனப்படும் இவ்வுடலும் ப்ரஹ்மாண்டமும் இயற்கையில் ஜடமானதால் சேதனன் ஒருவனால் தூண்டப்படாதவரை அசைவற்றதாகவே இருக்கும்.)

கேள்வி: எதற்கு ஹிருதயம் இல்லை?

பதில்: கல்லுக்கு ஹ்ருதயமில்லை.

(கல்போல் தேகத்தில் நான் என்ற அபிமானமில்லாத ஞானிக்கு, சோகத்தையும், துக்கத்தையும் அனுபவிக்கக் கூடிய ஹிருதயம் கிடையாது.)

கேள்வி: வேகத்தால் விருத்தியடைவது எது?

பதில்: நதி.

கேள்வி: வேறு தேசத்திற்குச் செல்லுகின்றவர்களுக்குத் துணைவர் யார்?

பதில்: தன்னுடன் கூடவரும் கூட்டத்தினர்களே துணைவர்களாம்.

கேள்வி: வீட்டில் இருக்கின்றவனுக்கு உதவி புரிகின்றவள் யார் ?

பதில்: மனைவி.

கேள்வி: வியாதியால் பீடிக்கப் பட்டவனுக்குத் துணைவன் யார்?

பதில்: வைத்தியன்.

கேள்வி: இறக்கின்றவனுக்கு எது உதவி புரிகின்றது ?

பதில்: தானம்.

கேள்வி: அனைவருக்கும் அதிதி யார் ?

பதில்: ஆஹவனீயம் முதலிய அக்னி.

(அனைவரும் அக்னி உபாஸனம் செய்ய வேண்டுமென்பது கருத்து).

கேள்வி: எந்த தர்மம் வெகு நாளாக உள்ளது ?

பதில்: மோக்ஷத்திற்கு சாதனமான யாகம் முதலியவை வெகு நாளாக உள்ளவை.

கேள்வி: அமிருதம் என்பது எது ?

பதில்: மோக்ஷத்திற்கு சாதனமான ஹோமத்திற்கு உபயோகப் படுவதால், பசுவின் பாலே அமிருதமெனப்படும்.

கேள்வி: உலகம் முழுவதும் வியாபித்திருப்பது எது ?

பதில் : வாயு.

(இந்த நான்கு கேள்வி பதில்களிலிருந்து கோக்ஷீரத்தால் ஹோமம் முதலியவற்றைச் செய்து வாயுஸ்வரூபமாக ஆகி, பிறகு மோக்ஷத்தை யடையலாம் என்று கூறப்பட்டதாக ஆகிறது.)

கேள்வி: ஒருவனாக எப்பொழுதும் சஞ்சரிப்பவன் யார் ?

பதில்: சூரியன்.

(உலகம் முழுவதும் வியாபித்திருக்கும் வாயு அழியுங்காலத்திலும் எஞ்சி நிற்பவன் எவன் என்பது இக்கேள்வியின் கருத்து. சூரியன் போல் ஒளிமயமான ஆத்மாதான் எஞ்சி நிற்பவன் என்பது பதில்.)

கேள்வி: எவன் அடிக்கடி பிறக்கிறான் ?

பதில்: சந்திரன்.

(ஒன்றாகவுள்ள ஆத்ம ஸ்வரூபத்தில் பிரபஞ்சம் எவ்வாறு தோன்றுகின்றது? மனத்தினால். மனத்திற்கு அதிஷ்டான தேவதை சந்திரன். ஆதலால் 'சந்திரன் அடிக்கடி பிறக்கின்றான்' என்ற பதிலிலிருந்து, பிரபஞ்சம் மனத்தினால் கற்பிக்கப் பட்டு தோன்றுகின்றதல்லாமல் உண்மையில் இல்லை என்று கொள்ளவேண்டும்.)

கேள்வி: பனிக்கு மருந்து எது ?

பதில்: நெருப்பு.

(பனி போல் ஆத்மஸ்வரூபத்தை மறைத்துக்கொண்டிருக்கும் அவித்யையைநிவிருத்தி

செய்யக்கூடியது எது என்ற கேள்விக்கு, 'தத்வமஸி' முதலிய வாக்கியத்திலிருந்து உண்டாகும் ஞானம் என்பது இங்கு பதிலாக உரைக்கப்பட்டிருக்கிறது. இங்கு 'பனி' என்றால் அவித்யை என்றும், ''அக்னி'' என்றால் அக்னியை அதிஷ்டான தேவதையாகக்கொண்ட ''வாக்'' என்றும் கொள்ளவேண்டும்.)

கேள்வி: மிகப் பெரிய ஆதாரமான வஸ்து எது ?

பதில்: பூமி.

(அஜ்ஞானம், அதனால் விளையும் பலவித சுகதுக்கங்கள், ஞானம், அதனால் உண்டாகும் மோக்ஷம், இவை எல்லாவற்றிற்கும் ஆதாரமாக இருப்பது இந்த உடல். நமது உடலில் பூமியின் அம்சமே அதிகமானதால் பூமி என்றே அது குறிப்பிடப்பட்டிருக்கிறது.)

கேள்வி: தர்மத்தை அனுஷ்டிக்கச் சிறந்த ஸாதனம் யாது ?

பதில்: விடா முயற்சி.

கேள்வி: புகழைப் பெறுவதற்கு உயர்ந்த ஸாதனம் யாது ?

பதில்: தானம். (கொடை)

கேள்வி: சுவர்க்கத்தையடையச் சிறந்த ஸாதனம் யாது ?

பதில்: உண்மை பேசுதல்.

கேள்வி: சுகத்தை யடையச் சிறந்த ஸாதனம் எது ?

பதில்: நல்லொழுக்கம்.

—(தொடரும்)

எல்லா இன்பங்களையும் பெறுவாய்!

சி. சுப்ரமண்ய பாரதி

உலகத்துப் பொருள்களிடத்தே நாம் ஆவலைத் துறந்துவிட்டால், அவை நமக்கு வசப்படுகின்றன. ஆவல் உள்ளவரை அவற்றுக்கு நாம் வசப்பட்டிருக்கிறோம்.

ஆன்மவுறுதி யில்லாதவனுடைய உள்ளம் குழம்பியதோர் கடலுக்கு ஒப்பாகும்.

உலகத்திலுள்ள மெய்யான இன்பத்தை யெல்லாம் நுகர்ந்து, தமக்கும் பிறர்க்கும் நிலைத்த பயன்கள் விளைவதற்குரிய நற்காரியங்கள் செய்து, உள்ளத்திலுள்ள குழப்பங்களும் துன்பங்களும் நீங்கி, சந்தோஷமும் புகழும் பெறவேண்டுமென்ற இச்சையுடையவர்கள், தமது இச்சையை நிறைவேற்றிக் கொள்வது அசாத்தியமன்று. அது இவ்வுலகத்திலேயே இந்த ஜன்மத்திலேயே சாத்யமாகும். அதெப்படியென்றால், தமது உள்ளத்திலே தீரத் தன்மை, அமைதி, பலம், தேஜஸ், சக்தி, அருள், பக்தி, சிரத்தை இந்த எண்ணங்களையே நிரப்ப வேண்டும்.

''எல்லா உயிர்களிலும் நானே இருக்கிறேன்'' என்றுரைத்தான் கண்ண பெருமான். எல்லோரும் அமர நிலை எய்தும் நன்முறையை இந்தியா உலகிற்கு அளிக்கும்!

தன்னை மற. தெய்வத்தை நம்பு. உண்மை பேசு. நியாயத்தை எப்போதும் செய். எல்லா இன்பங்களையும் பெறுவாய்.

நீதி, ஸமாதானம், ஸமத்துவம் இவ்வற்றாலேயே இவ்வுலகத்தில் தீராத தைரியமும், அதனாலே தீராத இன்பமும் எய்தலாம். வேறு வழியில்லை.

இந்த உலகம் இன்பம். இதிலுள்ள தொழில், வியாபாரம், படிப்பு, கேள்வி, வீடு, மனைவி, மக்கள் எல்லாவற்றிலும் ஈசன் அளவிறந்த இன்பத்தைக் கொட்டி வைத்திருக்கிறான். விதிப்படி நடப்போர் இந்த ஸுகங்களை நன்றாக அனுபவிக்கிறார்கள். ஈசனுடைய விதி தவறும் கூட்டத்தார் துன்பமடைகிறார்கள்.

எத்தனை புதிய இன்பங்களைக் காட்டியபோதிலும், மனம் அவற்றில் நிலை பெறாமல், மீண்டும் ஏதேனும் ஒரு துன்பக்குழியிலே கண்ணைத் திறந்துகொண்டு போய் விழுந்து தத்தளிக்கத் தொடங்குகிறது.

எதைத் தொட்டாலும் இன்பமும் துன்பமும் இருக்கத்தான் செய்கிறது. ஆனால் நாம் அறிவினாலே பொருள்களின் துன்பத்தைத் தள்ளி இன்பத்தை எடுத்துக்கொள்ளலாம்.

உடம்பை வலிமை செய்வதற்கு மனவலிமை வேண்டும்.

உடம்பு நாடிகளுக்கு வசப்பட்டது. நாடிகள் மனத்தின் வசமாகும். ஆகையால் உடம்பிலுள்ள நோய்களைத் தீர்த்து வலிமை யேற்றுவதற்கு மனவுறுதி, நம்பிக்கை, உத்ஸாகம் முதலிய குணங்கள் பிரதானமாகக் கொள்ளத் தகும்.

ஓர் உலக சாதனை

திரு. வி. ஜி. பன்னீர்தாஸ் சகோதரர்கள் சிறந்த அருள் நெறியாளர்கள். நமது ''அருள்'' பத்திரிகையின் வளர்ச்சியிலே ஆர்வம் கொண்டவர்கள்.

இந்தக் குடும்பத்தினர் எல்லோருமே சர்வ சமய சமரச மனப்பான்மை படைத்தவர்கள். அவர்கள் ஏழுமலையானையும் வணங்குவார்கள். இயேசுநாதரையும் வணங்குவார்கள் வேல் முருகனையும் வணங்குவார்கள். வேளாங்கண்ணி மாதாவையும் வணங்குவார்கள். எந்தப் பெயரிலே எந்த வடிவத்திலே வணங்கினாலும், வணங்கப்படுகிற இறைவன் ஒருவனே என்னும் உண்மையை, அவர்கள் தம் உள்மார உணர்ந்திருப்பதே இதற்குக் காரணமாகும்.

அத்துடன், வர்த்தகத் துறையிலும் இவர்கள் பெரும் புகழ் படைத்தவர்கள்.

13-1-69'ல் பம்பாயில் புதிய மர்பி ரேடியோத் தொழிற்சாலையை இந்தியாவின் துணைத் தலைமை அமைச்சர் திரு. மொரார்ஜி தேசாய் திறந்து வைத்தார். இவ் விழாவிற்கு சென்னை வி. ஜி. பன்னீர்தாஸ் சகோதரர்கள் பிரத்தியேகமாக அழைக்கப்பட்டிருந்தனர்.

''இந்தியாவின் தலை சிறந்த மர்பி ரேடியோ விற்பனையாளர்'' என்ற சிறப்பு விருதினைப் பன்னீர்தாஸ் சகோதரர்களுக்கு மர்பி அதிபர் லக்கன்பால் அளித்தார். அவர் பேசுகையில் 'இந்திய வாணிபத்துறையின் அதிசயமனிதர்கள் பன்னீர்தாஸ் சகோதரர்கள். எளிய சூழ்நிலையில் வாணிபத்தைத் தொடங்கிய அவர்கள் இன்று இந்தியாவின் தலை சிறந்த ரேடியோ விற்பனையாளர்களாக உயர்ந்துள்ளனர். அவர்களது முன்னுதாரணத்தை ஏனைய விற்பனையாளரும் பின்பற்ற முன் வரவேண்டும்' என்று கேட்டுக்கொண்டார்.



திரு. வி. ஜி. பன்னீர்தாஸ் சகோதரர்கள்

இங்கிலாந்து மர்பி அதிபரும், பிரபல பிரிட்டிஷ் தொழில் மேதையுமான திரு. ஜான்டேவிஸ் பேசுகையில், பன்னீர்தாஸ் சகோதரர்களின் சாதனை ஓர் உலக சாதனை என்று புகழ்ந்துரைத்தார்.

''1970'ல் தவணை முறைத் திட்டம்'' என்பது பற்றி திரு. பன்னீர்தாஸ் அவர்களின் சகோதரர் திரு வி. ஜி. சந்தோஷம் உரையாற்றினார்.

திரு. பன்னீர்தாஸ் சகோதரர்கள் அருள் வளத்திலும் பொருள் வளத்திலும் மேலும் மேலும் வளர்ந்தோங்குமாறு, இறைவனை வழுத்துகிறோம் —ஆசிரியர்

வெளியிடுபவரும், ஆசிரியரும்: இராம. மணிமேகலை, 4 தணிகாசலம் செட்டி ரோடு சென்னை-17. அச்சிடுபவர்: கொண்டா காசி. சீதாராமன், ராமன்ஸ் பிரிண்டிங் பிரஸ், 81-5 பாண்டிபஸார், தியாகராயநகர், சென்னை-17.

படிக்க வேண்டிய பத்திரிகை



சேங்காலிபுரம்

பிரம்மஸ்ரீ

அனந்தராம தீக்ஷிதர்

உபந்யாஸக சக்ரவர்த்தி, சேங்காலிபுரம் பிரம்மஸ்ரீ அனந்தராம தீக்ஷிதர் அவர்கள், திண்டுக்கல்லிலிருந்து பின் வருமாறு எழுதியிருக்கிறார்கள்:

தேதி : *23-12-68*

''ஸ்ரீ திருமதி தமிழ்வாணன் அவர்களுக்கு ஸர்வமங்களமும் உண்டாகும்படி, ஸ்ரீ குருவாயூரப்பனைப்பிரார்த்தித்து எழுதியது. உபயக்ஷேமம். தங்களால் வெளியிடப்படும் 'அருள்' பத்திரிகையைப் படித்துப் பார்த்தேன்......'அருள்' பத்திரிகையில் தர்ம சாஸ்திரம், வேதாந்தம், பக்தி, ஞானம், வைராக்யம் முதலியவைகள் எளிய நடையில் யாவருடைய உள்ளத்தையும் தொடும்படி அமைந்து இருப்பதால், இது ஒவ்வொரு மனிதனுக்கும் படிப்பதற்குத் தேவையாகும். தம்பதிகளாகிய தாங்கள் இருவரும் இவ்வாறே தர்மங்களைப் பரப்பிக்கொண்டு, க்ஷேமத்தை அடையக் கோருகிறேன்.''

மதிப்பிற்கும் வணக்கத்திற்கும் உரிய தீக்ஷிதர் பெருமான் அவர்களின் அன்பும் ஆசியும் எங்களுக்குப் பெருமையையும் பேருக்கத்தையும் அளிக்கிறது. அவர்களுக்கு எங்கள் உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

—ஆசிரியர்

அட்டைப் பட விளக்கம்

இவ்விதழின் முகப்பு அட்டையை அலங்கரிக்கும் மூவரையும், தமிழுலகம் நன்கு அறியும்.

அவர்களுள், திரு. ஆதிநாராயணச் செட்டியாரவர்கள் சேலத்தில் ஒரு தலைசிறந்த வழக்கறிஞராக விளங்குபவர். நேர்மை குன்ருத நீதி நெறியாளர். 'உள்ளத்தை இறைவனது கோயிலாக்கி, உலகியலில் ஏழைகட்கு உதவவேண்டும்' என்ற குறிக்கோளைக் கொண்டவர்.

திரு. சா. கணேசன் அவர்கள் ஓர் அரசியல் தலைவர். ஆனுல் அரசியலைக் காட்டிலும் இலக்கியத்திலும் சமயத்திலுமே உளங்கலந்த ஈடுபாடு கொண்டவர். ஒரு வகையில் பார்த்தால், அவரது இலக்கியத் தொண்டுக்கும் சமயத் தொண்டுக்கும் அரசியல் சிறிது இடைஞ்சலாய் இருக்கிறது என்றேசொல்லவேண்டும். எனவே அரசியலை முற்றிலும் விட்டுவிட்டு, சமயத் தொண்டில் மட்டுமே அவர் முழுமையும் ஈடுபடுவாராளுல், நம் தமிழுலகத்திற்கு அது பெரும் நன்மையை விளைப்பதாய் இருக்கும்.

திரு. குன்றக்குடி அடிகளார் ஒரு சைவசமயாச்சாரியாராகப் பதவி தாங்குபவர். சிவப்பேற்றைவிரும்புகிறவர்கள்இறைவன்பால் அன்பில்லாதவர்களோடு இணங்கலாகாது என்று சிவஞான போதம் செப்புகிறது. அதற்கு நேர்மாருக, இவர் ஈ. வே. ரா., அண்ணு போன்ற நாத்திகர்களிடத்தேதான் நெருங்கிய தொடர்பு பூண்டு ஒழுகுகிருர். சென்னையிலே அண்மை நடைபெற்ற சைவ சித்தாந்த சமாஜமாநாட்டில் கூட, அவ்விருவருக்கும் இவர் புகழ்மாலை புனைந்து ஏத்திஞர். இனியேனும் இவர் தம்முடைய நாத்திகச் சாயத்தைக் கழுவிக்கொண்டு, தாம் தாங்கும் பதவிக்குத் தகுதியுடையவராக விளங்கவேண்டும் என வேண்டுகிறேம்.

கட்டுரையாளர்களுக்கு

''அருள்'' பத்திரிகையில் மூன்று அல்லது நான்கு பக்கங்களுக்கு மேற்படாதவாறு, தெளிவான கையெழுத்தில், காகிதத்தின் இரு பக்கங்களிலும் எழுதாமல் ஒரு பக்கத்தில் மட்டும் எழுதியனுப்பப்படுகிற கட்டுரைகள் வரவேற்கப் படுகின்றன. வெளியிட இயலாத கட்டுரைகளைத் திரும்பப் பெற வேண்டுவோர், அவற்றோடு போதிய தபால் ஸ்டாம்புகள் வைத்து அனுப்ப வேண்டும்.

—ஆசிரியர்

தேவர்களும் அசுரர்களும்

சிருங்கேரி
ஜகத் குரு
ஸ்ரீ சந்திர சேகர பாரதீ ஸ்வாமிகள்

தேவர்களும் அஸுரர்களும் ஒரே தந்தைக்கு வெவ்வேறு தாய்கள் மூலம் பிறந்தவர்கள்.

கல்பத்தின் ஆரம்பம் முதலே அவர்களுடைய ஸ்வபாவமும் மனப்பான்மையும் வேறுபட்டிருந்ததை உணர்ந்து, தனித் தனியே நெடுந்தூரத்தில் அமைந்துள்ள பிரதேசங்களில் வஸிப்பதே நியாயமும் புத்திசாலித்தனமுமாகும் என்று நிச்சயித்து, தேவர்கள் தேவலோகங்களிலும், அஸுரர்கள் அஸுரலோகங்களிலும் வாழ்ந்து வந்தனர்.

எவனாவது ஓர் அஸுரன் பேராசையினுல் தூண்டப்பட்டு தேவலோகத்தின் பேரில் படையெடுத்து அதைத் தன் வசமாக்கிக் கொள்ள பிரயத்தினப்பட்டாலொழிய, ஸாமான்யமாக இருதிறத்தாருக்கும் சண்டைஏற்படவழியில்லாமலிருந்தது.

ஆதலால், ஒன்றுக்கொன்று ஸம்பந்தப்படாத அவரவர்கள் தனிப் பிரதேசங்களில் இருவரும் அநேகமாய் ஒதுங்கியே வாழ்ந்து வந்தனர்.

பிறகு திரேதாயுகத்தில் ஸ்ரீராமச்சந்திரமூர்த்தி தர்ம ஸ்தாபனத்தின் பொருட்டு அவதாரம் செய்தபோது, தேவர்கள் அயோத்யையிலும் கிஷ்கிந்தையிலுமாகவும், அஸுரர்கள் தண்டகாரண்யத்திலும் லங்கையிலுமாகவும் வஸித்தனர். அதாவது, வெவ்வேறு லோகங்களில் வஸிக்காமல், இந்த பூலோகமென்ற ஒரே லோகத்தில் வெவ்வேறு பாகங்களில் வஸித்து வந்தனர்.

இங்கேயும் அஸுரர்கள் பலத் திமிரினுல்உலகமனைத்தும் ஜயிக்க வேண்டுமென்று கிளம்பினுல், அல்லது அஸுரர்களின் பலத்தை லக்ஷ்யம் செய்யாமல் அவர்களிருக்கும் தண்டகாரண்யத்தில் தவம் செய்வதற்காக தேவர்கள்

புகுந்தால் சச்சரவு நேரலாமே தவிர, ஸாதாரணமாகப் போர் ஏற்படுவது அபூர்வம்.

துவாபர ,யுகத்தில் பகவான் ஸ்ரீகிருஷ்ணனாக அவதரித்த போது, இவ்விதம் ஒரே உலகத்தில் தனித்தனி பிரதேசங்களில் இருப்பதென்பது போதாதென்று தேவர்களும் ஆஸுரர்களும் ஒரே குடும்பத்தில் தோன்றினர்.

ஸ்ரீகிருஷ்ணனுடைய நேர் மாமன்கம்ஸனும், அத்தை மகன் சிசுபாலனும் அஸுரர்கள். ஸ்ரீ கிருஷ்ணனுடைய இன்னொரு அத்தை மக்களாகிய பாண்டவர்கள் தேவர்கள். ஆனால் அப் பாண்டவர்களுடைய ஞாதிகளான கௌரவர்கள் அஸுரர்கள். ஆதலால், இவர்களுக்குள் சண்டை சச்சரவுகள் ஏற்பட ஸந்தர்ப்பங்கள் பல இருந்தன.

அவர்கள் பிறந்த தினம்முதலே அவர்கள் சண்டையும் தொடங்கியது என்பது உண்மை. அவர்களுக்குள் சிற்சில சமயங்களில் ஸமாதானமும் அமைதியும் ஏற்பட்ட போதிலும், அவர்களுடைய ஸ்வபாவகுணங்களால் இடைவிடாமல் சண்டையிடும்படி தூண்டப்பட்டு, கடைசியில் மிகப் பெரியதான பாரத யுத்தம் ஏற்பட்டு, அநேகமாய் குடும்பம் முழுவதும் அழிந்துபோக நேர்ந்தது.

இக் கலிகாலத்திலோ, ஒரு குடும்பத்தில்பந்துக்களாகஇணைக்கப்பட்டு ஓரிடத்திலேயே வாழ்வது போதாதென்று ஆகிவிட்டது. தேவர்களும் அஸுரர்களும் வெவ்வேறு லோகங்களில் வஸிப்பதில் திருப்தி கொள்ளவில்லை. ஒரே லோகத்தில் வெவ்வேறு பாகங்களில் வஸிப்பதிலும் திருப்தி கொள்ளவில்லை. இப்போது இரு கோஷ்டியாரும் ஒரே சரீரத்தில் இருந்து விடுவதையே விரும்புகின்றனர்.

ஆதலால், இக்காலத்தில் ஒரு குறிப்பிட்ட மனிதன் தைவீஸம்பத் உள்ளவனா, ஆஸுரீஸம்பத் உள்ளவனா என்று சொல்ல முடிகிறதில்லை. ஒருஸமயம் தேவனாய் தோன்றுகிறான்; மறுக்ஷணம் ஸாக்ஷாத் அஸுரனாகவே இருக்கிறான். சில அம்சங்களை வைத்து ஒருவனை கெட்டவன் என்று எண்ணினால், மற்ற நடவடிக்கைகளில் அவன் தேவனாகவே காணப்படுகிறான்.

இக்காலத்தில் மனிதனின் அமைப்பில் தைவஆஸுர குணங்கள் இரண்டும் கலந்திருப்பதால், அவனுடைய வாழ்க்கையின் ஒவ்வொரு க்ஷணமும் இடைவிடாது ஓயாது சண்டை நிகழ்ந்தவண்ணமாய் இருந்து கொண்டிருக்கிறது. நல்ல கார்யமென்று தோன்றக்கூடிய அவனுடைய செய்கைகளிலும் விஷமமான அம்சங்கள் இல்லாமலிருப்பதில்லை. மிகவும் கெடுதலாக அவன் செய்யும் கார்யத்திலும் சிறிதாகவாவது ஏதேனும் நல்ல அம்சமும் இருக்கும்.

தேவர்களும் அஸுரர்களும் வெவ்வேறு லோகங்களில் இருந்த போது, தேவர்களை காக்க வேண்டி, பகவான் அநேகமாய் தன் பொறுப்பிலேயே தனித்து அஸுரர்களோடு போர் புரிந்திருக்கிறார்.

பூமியில் வெவ்வேறு பிரதேசங்களில் இருந்தபொழுது, அஸுரர்களின் முக்கிய வாஸஸ்தான

மான தண்டகாரண்ய ஜனஸ்தானத்திலும் லங்கையிலும், கிஷ்கிந்தையிலிருந்த தேவாம்சர்களான வானராதிகளின் உதவியைக்கொண்டு போரிட்டார்.

ஒரே குடும்பத்தைச்சேர்ந்தவர்களாகத் தோன்றியபோது, இருதிறத்தாரும் பகவானின் உதவியை நாடின ஸந்தர்ப்பத்தில் அவர்களுடைய வேண்டுகோளுக்கு இணங்கி, தன் ஸைன்யத்தை யெல்லாம் கௌரவர் பக்கம் நின்று போரிட அனுப்பிவிட்டு, தான் மாத்திரம் பாண்டவர் பக்கத்தில் நின்று மிகவும் அனுகூலமாக யோஜனைகள் சொல்லிக்கொண்டு ஸாக்ஷியாகவே நின்றுவிட இசைந்தார்.

இக்காலத்திலோ வெனில், மனிதரின் உள்ளத்திலேயே தேவர்களும் அஸுரர்களும் குடிகொண்டு பலமாக போரிட்டுக்கொண்டிருக்கையில், பகவானைப் பற்றி நினைப்பார் யாரும் இல்லை.

ஆனாலும் போரின் முடிவை நிச்சயித்துப் பலனைக் கொடுக்கும் அதிகாரம் அவரையே சேர்ந்திருப்பதால், அவரும் அவ்வுள்ளத்திலேயே இருந்துகொண்டு, அங்கு நடக்கும் போரில் சிறிதும் தலையிடாமல் அங்கு நடப்பதை பார்த்துக்கொண்டு, அதையொன்றும் கவனிக்காத உதாஸீனன் போலவே இருந்துவிட விரும்புகிறார்.

வள்ளுவரின் சொல் நயம்



திருமுருக
கிருபானந்த வாரியார்

''தேவன்'' என்ற சொல்லுக்கு ஒளியுடையவன் என்பது பொருள். திவ்ய என்ற பகுதியடியாகத் தேவன் என்ற சொல் பிறந்தது.

தனக்கென்று வாழ்கின்றவன் விலங்கு.

பாதி தனக்காகவும், பாதி பிறருக்காகவும் வாழ்கின்றவன் மனிதன்.

பிறருக்கென்றே வாழ்கின்றவன் தேவன்.

ஆசை வாழ்க்கை இருள் சூழ்ந்தது.

அன்பு வாழ்க்கை இன்ப மயமானது.

அருள் வாழ்க்கை ஒளி மயமானது.

திருவள்ளுவர் மனிதருள் தேவர். அதனுல் அவரைத் திருவள்ளுவ தேவர் எனப் பெரியவர்கள் கூறுவார்கள்.

மற்றும் தெய்வப் புலமை என்று திருவள்ளுவரையும், சேக்கிழாரையுமே குறிப்பிடுவது ஆன்ருேர் மரபு.

ஞானத்தின் திருவுருவாகிய தட்சிணமூர்த்தி, சனகாதி முனிவர்கள் நால்வர்க்குச் சகல வேத ஆகம, புராணங்களின் முடிவாகிய உட்பொருளைத் தமது திருக்கரத்தால் சின் முத்திரையாகக் காட்டி உபதேசித்தருளினுர்.

நிறைந்த அறிவுள்ளவர்கள் குறிப்பாலும், சுருங்கிய சொற்களாலும் விளக்கி விடுவார்கள். பல்லாயிரம் சொற்களால் சொல்ல வேண்டியதைப் பேரறிஞர்கள் சில சொற்களால் அழகாகவும், அருமையாகவும் சொல்வார்கள்.

திருமால் குறளாகி(குள்ள வடிவினராகி) இரண்டு அடியால் மூன்று உலகங்களையும் அளந்தார். திருவள்ளுவர் ஒன்றே முக்கால் அடியால் பதினுலு உலகங்களையும்அளந்து விட்டார்.

முதலாவதாக அவர் ''கடவுள் வாழ்த்து'' என்று கூறினுர்.

''கடவுள்'' என்ற சொல் செலுத்துவது' என்ற பொருள், பயக்கும். கடவுதல் — செலுத்துதல். செய்வது செய்யுள் என வந்தது போல், உலகங்களையும் உயிர்களையும் செலுத்துவது கடவுள். உயிர்க்குயிராய் நின்ற பொருள் கடவுள்.

ஒரு வண்டியைச் செலுத்துகின்றவன் அந்த வண்டிக்குள்ளேயே இருந்து செலுத்துவது போல், கடவுள் உடம்புக்குள், உயிருக்குள் நின்று இவற்றைச் செலுத்துகின்றான். எள்ளுக்குள் எண்ணெயைப் போல், உயிருக்குள் உயிராய் இறைவன் இருக்கின்றான்.

''உரைசேரும் எண்பத்துநான்கு
நூறாயிரமாம் யோனி பேதம்

நிரைசேரப் படைத்தவற்றின்
உயிர்க்குயிராய் ஆங்காங்கே
நின்றான்''

என்கின்றார் திருஞானசம்பந்தர்.

ஆகவே திருவள்ளுவர் இறைவனைக் கடவுள் என்ற சொல்லாலேயே உணர்த்தினார்.

கடவுளை ஏன் நாம் வாழ்த்த வேண்டும்? என்ற ஒரு வினா எழும். நாம் வாழ்த்தியா கடவுள் வாழப் போகின்றார்? எப்போதும் அழிவற்ற பொருளாக, இன்ப வடிவினராக, எல்லாம் செய்ய வல்லவராக, முடிவில்லாத ஆற்றலுடையவராக இருப்பவர் கடவுள். அப்படியிருக்க, அவரை வாழ்த்துவது எற்றுக்கு?

ஒரு நூலில் ஆயிரம் மணிகளைக் கோத்து வைத்திருக்கின்றது. ஆயிரம் மணிகளையும் அசைக்க வேண்டுமானால் ஒவ்வொரு மணியாகப் பிடித்து அசைப்பது அறிவுடைமையாகாது. ஆயிரம் மணிகளுக்குள்ளும் ஊடுருவி நிற்கும் நூலைப் பிடித்து அசைத்தால் ஆயிரம் மணிகளும் தாமே அசையும். அதுபோல் எல்லாவுயிர்களுக்குள்ளும் உயிருக்குயிராய் ஊடுருவி நிற்கும் இறைவனை வாழ்த்தினால் எல்லா உயிர்களும் வாழும்.

இந்த அரிய கருத்தையொட்டியே திருவள்ளுவர்,

''மலர்மிசை ஏகினான் மாணடி
சேர்ந்தார்

நிலமிசை நீடு வாழ்வார்''

என்று கூறினார்.

ஆன்மாக்களின் இதயத் தாமரையாகிய தகராகாசப் புண்டரீகத்தில் விளங்குகின்ற எம் பெருமானை வாழ்த்தி வணங்கி வழிபடுவார், என்றும் இன்புற்று நீடு வாழ்வார்.

கணவனும் மனைவியும் கூடி வாழ்வது எதன் பொருட்டு? என்ற வினாவை எழுப்பிக் கொண்டு, அந்த வினாவுக்கு அருமையாக விடை கூறுகின்றது திருக்குறள்.

நாயகனும் நாயகியும் வீட்டில் இருந்து செல்வத்தை ஓம்பி வாழ்கின்ற காரணம், விருந்தினரை ஓம்பி உதவிசெய்யும்பொருட்டே என்று கூறுகின்றது திருக்குறள்.

''இருந்தோம்பி இல்வாழ்வதெல்
லாம் விருந்தோம்பி

வேளாண்மை செய்தற்
பொருட்டு''

விருந்தோம்புவதே மேலான கடமை.

''விருந்து புறத்ததாத் தானுண்
டல் சாவா
மருந்தெனினும் வேண்டற்பாற்
றன்று''

இனி, அரிய திருக்குறள் ஒன்றைச் சிந்திப்போம்.

''செல்விருந் தோம்பிவருவிருந்து
பார்த்திருப்பான்
நல்விருந்து வானத்தவர்க்கு.''

பரிமேலழகர் இதற்கு ''தன் கட் சென்ற விருந்தைப் பேணிப் பின் செல்லக் கடவ விருந்தைப் பார்த்துத் தான் அதனோடுஉண்ண விருப்பான்'' என்று உரை எழுதியிருக்கின்றார்,

செல் விருந்து

செல் விருந்து என்றதற்கு ''தன்னை நாடிச் சென்ற விருந்து'' என அது பொருள் தருகின்றது.

இதனினும் மேலான பொருள் ஒன்றை இங்கு கூறுகின்றேன்.

நமது நாட்டில் இருந்த சில ஞானிகள் ஆகார விஷயத்தில் அஜகரம் என்ற விருத்தியை மேற்கொண்டார்கள். அஜகர விருத்தி என்றால் மலைப்பாம்பு போன்று உண்பது என்று பொருள். மலைப்பாம்பு உணவை நாடி எங்கும் செல்லுவதில்லை. அது இருக்குமிடத்திற்கு யதேச்சையாகஒருபிராணி வருமானால், அதனைப் பிடித்து அருந்தும்.

அதுபோல, அந்த ஞானிகள் எங்கும் உணவை நாடிச் செல்ல மாட்டார்கள். அவர்கள் தன்னிச்சை போல் சென்று கொண்டிருப்பார்கள். அவர்களைத் தேடிக் கொண்டு போய் உணவு தர வேண்டும். இந்த வகையில் சேர்ந்தவர் பட்டினத்து சுவாமிகள்.

''இருக்கு மிடந்தேடி என்பசிக்கே
யன்னம்
உருக்கமுடன் கொண்டு வந்தால்
உண்பேன்—பெருக்க
அழைத்தாலும்போகேன் அரனே
என் தேகம்
இளைத்தாலும் போகேன் இனி.''

என்று கூறுவதிலிருந்து, அவர் அஜகர விருத்தியை மேற்கொண்டவர் என்பது தெளிவாகின்றது.

எனவே செல் விருந்து என்றால், வீடு தேடி வராது தன் விருப்பம்போல் செல்லுகின்ற சிவஞானிகளைத் தேடி உணவு தந்து ஓம்புதல் வேண்டும் என்று பொருள் கொள்ள வேண்டும்.

இவ்வாறு செல்விருந்து ஓம்பியும், வரு விருந்தைஎதிர்பார்த்து ஆதரித்தும் உதவுகின்ற தரும குணசீலனை, தேவர்கள் தமக்கு நல்விருந்து என எதிர்பார்த்து உபசரித்துச் சிறப்புச் செய்வார்கள் என்று பொதுமறை கூறுகிறது.

இவ்விதம் அரிய பெரிய கருத்துக்களை விளக்கி நமக்கு நலஞ் செய்கின்ற அமுதத் தமிழ் திருக்குறள்.

நச்சுப் பொய்கை

ஆர். முத்துக்கிருஷ்ண சாஸ்திரிகள்

பாண்டவர்கள் 'த்வைதவனம்' என்ற காட்டில் வசித்து வருகையில், ஒரு சமயம் ஒரு பிராமணன் அரணிக்கட்டைகளையும், அக்னிக்காக அவற்றைக் கடையும் மத்தையும் ஒரு மரத்தில் மாட்டி வைத்திருந்தான்.

அதே மரத்தில் ஒரு மான் தன் தினவைத் தீர்த்துக்கொள்ள உராய்ந்தது. அந்தக் கட்டைகளும், மத்தும் அதன் கொம்பில் மாட்டிக்கொண்டன. உடனே அந்த மான் அக்கட்டைகளுடனேயே வெகுதூரம் விரைந்து ஓடிவிட்டது.

அக்கட்டைகள் இல்லையேல் அந்த பிராமணன் வழக்கம் போல் யாகங்களை அனுஷ்டிக்க இயலாது. ஆதலால் பாண்டவர்களையண்டி அந்த மானிடமிருந்து அக் கட்டைகளைத் தனக்கு திரும்பப் பெற்று அளிக்கவேண்டுமென வேண்டிக் கொண்டான். அதற்கிணங்கி பாண்டவர்கள் வில்லும் கையுமாகப் புறப்பட்டு கானகத்தில் வெகுதூரம் சென்றனர்.

ஆனால் அந்தமான் காணப்படவில்லை. அப்பொழுது பசியும் தாகமும் அவர்களை மிகவும் பீடித்தன. களைப்புற்று ஓர் ஆலமரத்தடியில் அமர்ந்து, ''சமீபத்தில் உள்ள குளத்திற்குச் சென்று நீயும் நீரை அருந்தி எங்களுக்கும் கொண்டு வா'' எனக்கூறி நகுலனை அனுப்பினர்.

அவனும் அக்குளத்திற்கு விரைந்தோடி நீரைக் குடிக்க அக்குளத்தில் இறங்கினன். ''தண்ணீரைக் குடிக்காதே! குளம் என்னுடையது. என்னுடைய கேள்விகளுக்கு பதில்களைச் சொல்லிவிட்டு நீரை நீயும் குடி. எடுத்தும் செல்'' என ஆகாயத்திலிருந்து ஒரு குரல் கேட்டது.

பொறுக்க முடியாத தாகத்தால் அதை இலக்ஷியம் செய்யாமல், குளத்தில் உள்ள குளிர்ந்த நீரை அருந்தினன் நகுலன். உடனே அந்த ஜலக்கரையிலேயே விழுந்து மாண்டான்.

வெகு நேரம் வரை நகுலன் திரும்பி வராததால் அவனைத் தேடிக்கொண்டு ஸஹதேவன்

சென்றான். அதே குரலை அவனும் கேட்டான். நகுலனைப் போலவே அதை இலக்ஷியம் செய்யாமல் நீரைக்குடித்து அவனும் மாண்டான்.

பிறகு அர்ஜுனனும் பீமனும் சென்று முன் சென்றவர்களைப் போலவே மாண்டனர்.

கடைசியில் தருமபுத்திரர் சென்றார். அதே குரலை அவரும் கேட்டார். கீழே இறந்து கிடக்கும் தன் சகோதரர்களைக் கண்டு பலவாறாக வருந்தினார். பிறகு தைரியத்துடன், வீராதி வீரர்களான நமது சகோதரர்களைக் கொன்றவர் யாராக இருக்கலாம் என்று ஆலோசித்துக்கொண்டே நான்கு பக்கங்களிலும் பார்த்தார். மரத்தின்மேல் வீற்றிருக்கும் ஒரு பெரிய கொக்கைக் கண்டார்.

"நீர் யார்? உமக்கு எங்களால் ஆகவேண்டியதென்ன? உம்மைக் கண்டதும் என் மனம் நடுங்குகிறது. உண்மையைத் தெரிவிக்கவேண்டும்" என அக் கொக்கை நோக்கி வினவினார் தருமர்.

"நான் சாமானியக் கொக்கல்ல. நான் ஓர் யக்ஷன். நான் தான் உன் சகோதரர்களைக் கொன்றேன். என் குளத்தில் நான் கேட்ட கேள்விகளுக்கு பதில்களை உரைக்காமல் தண்ணீர் குடிக்கக்கூடாது என்ற என் வார்த்தையை இலக்ஷியம் செய்யாமல் அவர்கள் குடித்தனர். ஆதலால் அவர்களைக் கொன்றுவிட்டேன். நீயும் தண்ணீர் குடிக்க விரும்பினால் என்னுடைய கேள்விகளுக்குப் பதில்களை உரைக்கவேண்டும்" என கொக்குருவங்கொண்ட அந்த யக்ஷன் பதில் உரைத்தான்.

"கேள்விகளைக் கேளுங்கள். எனக்குத் தெரிந்தவரை பதில் சொல்லுகிறேன்" என தருமர் கூற, அந்த யக்ஷன் பல கேள்விகளைக் கேட்கின்றான்.

கேள்விகளும்

பதில்களும்

1\. கேள்வி: சூரியனை உதிக்கும்படி செய்கின்றது எது?

பதில்: பரப்பிரஹ்மம்.

கேள்வி: ஜீவன் உடல் முதலியவற்றைவிட வேறானவன் என எது கூறுகின்றது?

பதில்: வேதம்.

2\. கேள்வி: சூரியனைச் சுற்றி அவனுடன் கூடச் செல்லுகின்றவர்கள் எவர்?

பதில்: தேவர்கள். (வேதங்கள் என்றும், இங்குள்ள "தேவா:" என்ற சொல்லுக்குச் சிலர் பொருள் கூறுகின்றனர்.)

கேள்வி: உடல் முதலியவற்றைவிட வேறு என்று அறிந்துகொள்ள ஜீவனுக்கு ஸஹாயமாகக் கூடவே இருப்பவை எவை?

பதில்; சமம், தமம் முதலிய ஆறு குணங்கள்.

3. கேள்வி: எது சூரியனை அஸ்தமனம் அடையச் செய்கிறது?

பதில்: தர்மம்.

கேள்வி: எது ஜீவனை அவன் சொந்த ஸ்தானத்திற்கு (அதாவது பிருஹ்மஸ்வரூபத்திற்கு) அழைத்துச் செல்லுகிறது?

பதில்: கர்மா, உபாஸனம் முதலிய தர்மங்கள் (ஆத்மஞானத்தையளித்து, பிருஹ்மஸ்வரூபத்திற்கு அழைத்துச் செல்கின்றன.)

4. கேள்வி: சூரியன் எங்கே நிலைபெற்றிருக்கிறான்?

பதில்: 'ஸத்யம்' எனப்படும் பரமாத்மஸ்வரூபத்தில்.

கேள்வி: ஜீவன் எங்கே நிலைபெற்றிருக்கிறான்?

பதில்: பரமாத்ம ஸ்வரூபத்தில்.

5. கேள்வி: எதனால் மனிதன் சுரோத்ரியனாக ஆகின்றான்?

பதில்: ஆசார்யமுகமாக வேதங்களை அத்யயனம் செய்து, அவற்றின் பொருள்களையும் அறிந்து கொள்ளுவதால்.

6. கேள்வி; எதனால் மனிதன் உயர்ந்த பதவியை அடைகின்றான்?

பதில்: தவத்தினால்.

கேள்வி: எதனால் பிரஹ்மத்தை அறிகின்றான்?

பதில்: 'தபஸ்' எனப்படும் மனனத்தால்.

(குரு முகமாக அறிந்த விஷயத்தை பல யுக்திகளைக் கொண்டு ஆராய்ந்து பார்த்தல் என்பதே "மனனம்". இதனால் பிரமாணத்திலும் பிரமேயத்திலும் உள்ள சந்தேகங்கள் ஒழிந்து தத்வ நிச்சயம் ஏற்படுகிறது.)

7. கேள்வி: எது மனிதனுக்கு உண்மையில் ஸஹாயமாக இருக்கிறது?

பதில்: தைரியம்.

கேள்வி: ஜீவன் எதனால் இப்பொழுது உள்ள ஜீவஸ்வரூபத்தைக் காட்டிலும் வேறான வாஸ்தவ பிருஹ்மஸ்வரூபத்தை அடைகின்றான்?

பதில்: நிதித்யாஸனத்தால்.

8. கேள்வி: மனிதன் எதனால் புத்திசாலியாக ஆகின்றான்?

பதில்: பெரியோர்களை சேவிப்பதால்.

கேள்வி: சிரவணம், மனனம் முதலியவை எதன் மூலம் சித்திக்கின்றன?

பதில்: ஆசார்யஸேவையின் மூலம்.

9. கேள்வி: அந்தணர்கள் எதனால் தேவர்கள் (அதாவது சுவர்க்கத்திற்குச் செல்லத் தகுதியுள்ளவர்களாக) ஆகின்றனர்?